ஆண்டறிக்கை 2020

உயர்வுக்கான மையம்

தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்,
எம்.டி.எச். ஜயவர்தன மாவத்தை,
அத்துருகிரிய.

தோலைபேசி : 011-2770232
தொலைநகல் : 011-2798775
மின்னஞ்சல் : nipm1979@gmail.com.
வலைத்தளம் : www.nipm.gov.lk

பொருளடக்கம்

நோக்கு மற்றும் பணி நோக்கு	01
தவிசாளரின் செய்தி	02
பணிப்பாளர் மதிப்பாய்வு	03-07
நிறுவனத்தின் உருவாக்கம் மற்றும் நோக்கம்	08-09
நிறுவனத்தின் அதிகாரங்கள்	09-10
ஆளுநர் சபையின் தொகுப்பு	11
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் அறிக்கை	12
நிறுவனத்தின் பணியாளர்கள்	13-16
நிர்வாகத்தின் மீளாய்வு	17
கட்டமைப்பு அட்டவணை	18
நிறுவனத்தின் முதன்மை செயற்பாடுகள்	19-21
பயிற்சிநெறிகளின் முன்னேற்ற மீளாய்வு	21-29
NVQ கீழ் இயலளவு அபிவிருத்தி பாடநெறிகள்	29-30
ஏனைய நிறுவனங்களுக்காக நடத்தப்படும் பரீட்சை	31
பெருந்தோட்ட முகாமைத்தவ விஞ்ஞானமாணி (BSc.) பட்டம்.	32-33
நிறுவனத்தின் தொழில்வாண்மை அங்கத்துவம்	34
கிடைக்கும் வசதிகள்	35-37
எங்கள் செயற்பாடுகள்	38
நிதி மீளாய்வு	39-43
நிறுவனம் முகங்கொடுத்த சவால்கள்	44
முடிவுரை	45

நோக்கு

பெருந்தோட்ட முகாமைத்துவம் குறித்த பயிற்சி ஆலோசனை மற்றும் ஆரச்சி செய்வதில் அதி சிறந்த நிலையமாக இருத்தல்

குறிக்கோள்

பெருந்தோட்ட தொழிலிலுள்ள அனைத்து மனித சொத்துகளின் தொழில்சார் திறனை தரமான பயிற்சி மூலம் முழுமையை நோக்கி உயர்த்துதல

தவிசாளரின் செய்தி



2020 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கைக்கு தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் தற்போதைய தவிசாளராக இந்த செய்தியை மிகவும் மகிழ்ச்சியுடன் வழங்குகிறேன்.

எந்தவொரு நிறுவனமும் அதன் நோக்கங்களை அடைவதற்காக பல்வேறு வகையான வளங்களை ஒழுங்கு செய்கின்றது, இந்த பல்வேறுபட்ட வளங்களில் மனித வளம் மட்டுமே உயிர் வாழ்கின்ற வளமாகும். மனித வளமானது நிறுவனத்தினுடைய நோக்கங்களை அடைவதற்கு மிகவும் முக்கியமானது. ஏன்னெனில் ஏனைய அனைத்து உயிரற்ற வளங்களும் மக்கள் குழுவால் வழி நடத்தப்படுகின்றது. பரந்தளவில் அறிவை பகிர்தல், திறன் மேம்படுத்தல் மற்றும் மக்களிடையில் நேர்மையான மனப்பாங்கை வளர்ப்பதன் முலம் மனிதவள விருத்தி மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாறான சூழலில் தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம், பெருந்தோட்ட துறையக்கான ஒரு பயிற்சி நிறுவனமாக புதிப்பிக்கப்பட்ட அறிவு, திறன் மற்றும் மனப்பாங்கை கொண்ட திறமை மிக்க மனித குழுவை உருவாக்கும் பாரிய சமுக பொறுப்புபை கொண்டிருக்கின்றது.

2020 ஆம் ஆண்டை திரும்பி பார்க்கும் போது பெருந்தோட்ட கைத்தொழில் துறை பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுதமையை காணலாம். பூகோள வெப்பமாதல் தொழிலாளர் ஈர்ப்பு குறைவடைந்த நிலை மற்றும் கொவிட் -19 தொற்று நோய்பரவல் நிலை உள்ளடங்கலாக இந்த சவால்கள் முழு பெருந்தோட்ட அமைப்பபையும் சிக்கலாக்கியது. ஆனால் தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம், என்ற வகையில் பயிற்சி நெறியின் போது உதவியாளராக பணியை நிறைவேற்றியிருந்ததுடன் இந்த சவால்களை கண்டு பின்வாங்காமல் நிலையாக நிலைத்திருந்தது. இந்த செயலாற்றுகை அறிக்கை அதற்கு சான்றாகும்.

பெருந்தோட்ட கைத்தொழில் மற்றும் விவசாய ஏற்றுமதி அமைச்சர் கௌரவ. கலாநிதி ரமேஸ் பதிரண, கௌரவ. திருமதி. கணகா ஹெரத் பெருந்தோட்ட கம்பனி மறுசீரமைப்பு, தேயிலை மற்றும் இறபர் பெருந்தோட்டங்கள் தொடர்பான பயிர்செய்கை மற்றும் தொழிற்சாலை நவீனமயப்படுத்தல் மற்றும் தேயிலை மற்றும் இறபர் மேம்படுத்தல் இராஜங்க அமைச்சர்.
திரு. ரவீந்திர ஹேவவிதரரண. பெருந்தோட்ட அமைச்சின் செயலளார், திரு ஜெ.எம். திலகரத்ன பண்டார பெருந்தோட்ட கம்பனி மறுசீரமைப்பு, தேயிலை மற்றும் இறபர் பெருந்தோட்டங்கள் தொடர்பான பயிர்செய்கை மற்றும் தொழிற்சாலை நவீனமயப்படுத்தல் மற்றும் தேயிலை மற்றும் இறபர் மேம்படுத்தல் இராஜங்க அமைச்சின் செயலளார். மற்றும் பெருந்தோட்ட இராஜங்க அமைச்சு மற்றும் பெருந்தோட்ட அமைச்சின் ஏனைய அதிகாரிகளுக்கும், நிறுவன செயல் திறனை அதிகரிக்க வழி காட்டிய எங்கள் குழுவினர்களுக்கும் நான் நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

எங்கள் நிறுவனத்தை நிலைபேறான வளர்ச்சியை நோக்கி வழிநடாத்தியதற்கு ஆளுநர் சபை உறுப்பினர்களுக்கு நன்றியை தெரிவித்து கொள்கின்றேன்.
தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் பணிப்பாளர் பிரதம நிறைவேற்று அதிகாரி கலாநிதி பிராசாத் தர்மசேன மற்றும் ஏனைய ஊழியர்களின் அயராத பங்களிப்பிற்காக நான் விசேட நன்றிஙை தெரிவித்துகொள்கின்றேன

ஏ.எல்.ஏ.அசோக ஸ்ரீவர்தன
தவிசாளர்
தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்
15. ஒகஸ்ட் 2021

பணிப்பாளர் மதிப்பாய்வு



தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம் 2020 ஆம் ஆண்டுக்கான அதன் வருடாந்த அறிக்கையை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறது, மேலும் கொவிட் 19 தொற்றுநோய்கள் நிறுவனத்தின் எதிர்கால திட்டங்கள் மற்றும் புதிய இயல்புநிலையுடன் எங்களின் முக்கிய செயல்பாடுகள் சாதனைகள், முயற்சிகள் ஆகியவற்றின் சிறப்பம்சங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

கடந்த சில ஆண்டுகளில் குறிப்பாக 2017 முதல் அமைதியாக ஆனால் நிச்சயமாக நாங்கள் ஒரு வலுவான கல்வி கலாச்சாரத்தை கடடியெழுப்பியுள்ளளோம். இது பல்வேறு கல்விச் சான்றுகளின் அடிப்படையில் பெருமைப்படுத்த கூடிய ஈர்க்ககூடிய புள்ளிவிபரங்களில் எளிதாக காணப்படுகின்றது. விசேடமாக நிறுன கொடியின் கீழ் நிகழ்ச்சிகள் மற்றும் பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை ஆகியவற்றால் நிருபணமாகின்றது. தொழில்முறை மேம்பாட்டில் எங்களது நற்சான்றிதழ்களை நாங்கள் தொடர்ந்து மேம்படுத்தி வருகிறோம்.
பெருந்தோட்ட சமூகத்தினரின் திறமைத் தளத்தை உயர்த்தும் வகையில் எமது பாடசலையை விட்டு வெளியேறுபவர்களுக்கான பாடநெறிகளுக்கு தரமான இளைஞர்களை தெடர்சியாக தேடுதல் மற்றும் கணிசமான அளவில் அதிகரிப்பது எமது இலக்காகும்.

கடந்த நிதியாண்டின் இறுதியானது கொவிட்19 தொற்றுநோய் வடிவத்தில் மனிதகுலத்திறகு தனித்துவமான சவால்களை கொண்டுவந்தது. தற்போதைய செயற்பாடுகள் மற்றும் எதிர்கால திட்டங்கள் அனைத்தும் ஆழமான நிச்சயமற்ற தன்மையால் பாதிக்கப்பட்டுள்ளன. இருப்பினும் NIPM போன்ற முதன்மையான நிறுவனத்திடம் இருந்து தரமான கல்வி மற்றும் பயிற்சியை நாடு தொடரந்து கோரும் என்பதற்கு சான்றுகள் உள்ளன மற்றும் NIPM சமூகம் உடனடித் தேவைகளுக்கு தீர்வு வழங்குவதற்கான சவால்களைத் தொடர்ந்து சமாளிக்கும். தற்போதைய தொற்றுநோய் கல்வி மற்றும் கல்வியின் போக்கை மாற்றியுள்ளது.

கல்விச் சான்றுகள்

2020 ஆம் ஆண்டில் தொற்றுநோய் பரவல் நிலைமையிலும் கல்வி, ஆராச்சி, நிர்வாக மற்றும் உட்கட்டமைப்பு களங்களை உள்ளடக்கிய பல புதிய முயற்சிகளை நிறுவனம் மேற்கொண்டுள்ளது என்பது நிங்கள் அனைவரும் அறிந்தவிடயம்.
மேற்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளும் ஒப்பீட்டளவில் நல்ல முன்னேற்றத்தை அடைந்து வருகின்றது. எங்கள் சிறந்த மாணவர்கள் மற்றும் ஊழியர்கள் நிறுவனத்தின் தொழில்முறை உறுப்பினர், முன்னால் மாணவர்கள் மற்றும் அர்ப்பணிப்புள்ள NIPM உறுப்பினர்கள் அவர்களின் பங்களிப்பு நிறுவனத்திற்கான தொழில்துறை அங்கிகாரத்திற்கு வழிவகுத்தது.

2020 ஆம் கல்வியாண்டில் தேசிய தொழிற்கல்வி தகுதி (NVQ) மட்டம் அடிப்படையிலான கல்வி முறையில் அங்கிகாரத்துடன் தோட்டப்பயிர் தொழில்நுட்பம் மற்றும் வரிவாக்க முகாமைத்துவம் ஆகிய இரண்டு டிப்ளோமாக்கள் தொடங்கப்பட்டுள்ளன. இது ISO தரநிலை தகுதியல் நிறுவனம் சான்றளிக்கத் தொடங்கப்பட்டது.

NIPM இன் இணைந்த பார்வையானது, உயர்தர தாக்க கல்விக்கருவிகள் மூலம் அறிவை மேம்படுத்துவதன் மூலமும் தொழில்நுட்ப ரீதியாக திறைமையான மற்றும் சமூக உணர்வுள்ள நிபுணர்களை உருவாக்க தரமான கல்வியை வழங்குவதன் மூலமும், புதுமை உந்துதல் முயற்சியாளரை ஊக்குவிப்பதன் ஊடாக நாட்டின் முன்னணி கல்வி தொழில்முறை நிறுவனமாக இருக்கவேண்டும். தொழில்துறையின் மூலோபாய இலக்குகள் மற்றும் தீவின் தேவைகள் இதன் ஊடாக குறிப்பிடப்படும்.

NVQ அடிப்படையிலான கல்வி முறை திறன் மேம்பாட்டை அபிவிருத்தி செய்யும் நோக்கில் ஒரு பதிய தேயிலை சுவைபார்க்கும் ஆய்வுகூடத்துடன' கூடிய முழு அளவிலான மாதிரி தேயிலை பதப்படுத்தும் நிலையத்தை நிறுவனம் அமைத்தது.
பெருந்தோட்டத்துறையில் கைத்தொழில் துறையினரின் நிபுணத்துவத்தை அங்கிகரிப்பதில் மேலும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய தொழில்சார் அங்கத்துவம் நிறுவனம் வழங்கிய மிக வலுவான ஆயுதமாகும். சமகால உறுப்பினர் வகைகளை அறிமுகப்படுத்துவதில் நிறுவனத்தின் சட்டம் திருத்தப்பட்டுள்ளது.

நிறுவனம் சுயாதீன பட்டம் வழங்கும் நிறுவனமாக நிறுவனத்தை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. இலங்கை உயர்கல்வி அமைச்சின் ஒப்புதலுக்கு சமர்ப்பிப்பதற்காக நாங்கள் மூன்று பட்ட படிப்பு வேலைதிட்டங்கள் மற்றும் நிறுவன மதிப்பாய்வின் அபிவிருத்தியை நிறைவுசெய்துள்ளளோம் என்பது மகிழ்ச்சியழிக்கின்றது. அதற்கிணங்க பட்டம் வழங்கும் நிறுவனமாக ஆராம்பிக்கபடவுள்ள நிறுவனத்தின் மையில் கல்லாக அதுருகிரியவிலுள்ள பிரதான வளாகத்தில் ஆறு மாடிகளை கொண்ட நிர்வாக மற்றும் கல்வி வளாகத்தை நிர்மானிப்பதற்கான நடவடிக்கையை நிறுவனம் மேற்கொண்டுள்ளதை அவதானிப்பதில் நாங்கள் பெருமையடைகிறோம்.

நிறுவனத்தின் மேன்மை
எதிர்காலத்திற்கு ஒழியை கொண்டுசெல்லவிருக்கும் சாத்தியமான நடுகை தொழில் நிபுனர்கள் மற்றும் முயற்சியாளர்களுக்கு ஒரு வலுவான பாதையை கட்டியெழுப்ப சிறுதொழில் செய்பவர்கள் ஆராச்சி நிறுவனங்கள், பொது மற்றும் தனியார் நிறுவனங்கள் மற்றும் நாடு முழுவதும் உள்ள மற்ற பங்குதாரர்கள் மற்றும் சர்தேச சமூகத்துடன் இணைந்து எங்கள் திட்டங்களை மேம்படுத்துவதற்கு நிறுவனம் மிக நெருக்கமாக செயற்படுகின்றது.. அதன் அடிப்படையில் 13 ஆண்டு உத்தரவாத கல்வி திட்டத்துடன் 453 மாணவர்கள் பயிற்றுவிக்கப்பட்ட 17 வருமானம் ஈட்டும் திட்டங்களை நாங்கள் மேற்கொண்டோம் மேலும் 2020 ஆம் கல்வியாண்டில் பயிற்சி பெற்ற மொத்த மாணவர்கள் மற்றும் சிறுதோட்ட காரர்கள் 1146 ஆகும்.

2020 ஆம் ஆண்டில் NIPM நடவடிக்கைகளின் சிறப்பம்சமாக கொவிட் 19 தொற்று நோய் நிலைமை இருந்த போதிலும் வெவ்வேறு படிப்புகளுக்காக பதிவுசெய்யப்பட்ட மாணவர்களின் சதவீதம் 90% ஆகும்.
நிறுவனம் கல்விதிட்டத்திலிருந்து . ரூபா 23.78 மில்லியன் உழைத்தது மற்றும் கல்விதிட்டத்திற்காக பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் முன்னேற்றம் மதிப்பிடப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையில் 62% பதிவாகியுள்ளது. 2020 ஆம் ஆண்டில் ரூபா 2.5 மில்லியன் ஒதுக்கீட்டில் நிறுவனம் சிறு தோட்ட துறைக்கான 50 திறன் விருத்தி திட்டங்களை நடத்துவதற்கு மதிப்பிட்டுள்ளது மிக முக்கியமாக கவனிக்க வேண்டிய விடயமாகும் நிறுவனம் 14 திட்டங்களை நடாத்திய சாதனைகளை காட்டுகிறது. NIPM உழைத்த வருமானம் ரூபா 45.95 மில்லியனாக பதிவாகியுள்ளது. இது 59% கல்விசார் நிதி முன்னேற்றமாகும்.

நிறுவனம் வாடகை வருமானம் ரூபா 6.36 மில்லியனாக பதிவாகியுள்ளது. மீண்டெழும் செலவீனம் ரூபா 113.53 மில்லியன். இது 2019

ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 18.1% குறைவடைந்துள்ளது. 2020 ஆம் ஆண்டில் அலுவலக வேலை நாட்கள் குறைவாக இருந்ததால் இந்த தொகை குறைவடைந்துள்ளது. உலக தொற்றுநோய்பரவல் நிலைமை காரணமாக நிறுவனத்தின் மிக முக்கிய பயிற்சி நடவடிக்கை மிக குறைந்த வேகத்தில் நகர்தப்பட்டுள்ளது.

உலக தொற்றுநோய்பரவலால் குறைந்த வேகத்தில் நகர்தப்படும் NIPM

தொற்றுநோய்பரவல் நிலைமை காரணமாக எதிர்மறையாக பாதிக்கப்பட்டுள்ளோம் ஆனால் எதிர்கால நெருக்கடிகளுக்கு சிறந்த முறையில் தயாராக இருக்க இந்த அனுபவத்தை பயன்படுத்துவது அவசியம். எதிர்காலத்தில் கலவையான முறையில் கல்வியினை வழங்குவதற்கான இயலளவை கட்டியெழுப்ப இந்த நோக்கத்தை ஆதரிக்க வேண்டும். தேவைக்கு ஏற்ப வகுப்பறை மற்றும் நிகழ்நிலை கற்பித்தல் முறைக்கு மாறுவதற்கு கல்விசார் ஊழியர்கள் விசேடமாக தயாரக இருக்கவேண்டும். இது எதிர்காலத்தில் தொற்றுநோய்பரவல் நிலைமையின் போது மட்டுமல் இயற்கை பேரழி மற்றும் பாதகமான வானிலை காணப்படும் சந்தர்ப்பங்களிகால் ஏற்படுத்தகூடிய இடையுறுகளால் மாணவர்களுக்கு ஏற்படும் அதிர்ச்சிகளின் போது மாணவர்களின் கல்வியை பாதுகாக்கும். கற்பித்தல் மற்றும் கற்றலுக்கான தனிப்பட்ட அணுகுமுறைகளுக்கான வாய்ப்புக்களையும் இது உருவாக்கும் இதனை கருத்தில்கொண்டு நேரிலோ அல்லது இணையத்திலோ கற்ப்பிக்க கூடிய நெகிழ்வான பாடத்திட்டங்களை உருவாக்குவது அவசியம் கூடுதலாக எங்கள் விரிவுரையாளர்கள் எதிர்காலத்தில் மூடப்படும் சந்தர்ப்பத்தில் பரந்த அளவிலான தகவல் தொழிலநுட்ப சாதனங்களை பயன்படுத்துவதற்கு தயாராக இருக்க வேண்டும் மற்றும் எங்கள் பங்கேற்பாளர்களில் பெரும்பாலானோர்கள் தீவு முழுவதும் சிதறி இருப்பதால் நிகழ்நிலை முறையில் விரிவுரையளை நடத்துவது கட்டாயமாகும்.

வலையமைப்பு NIPM இனை வலுவாக்குகின்றது

தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம் நாட்டிலுள்ள அனைத்து ஆராய்ச்சி நிறுவனங்கள், தனியார் மற்றும் அரச நிறுவனங்களுடன் வலுவான , வினைத்திறனான விரிவாக்கல் சேவை வலையமைப்பை கொண்டுள்ளது. இது பெருந்தோட்ட உரிமையாளர்கள், விவசாயிகள் மற்றும் விரிவாக்கல் செயற்பாட்டாளர்களுக்கு மிக பிந்திய தொழில்நுட்பம், அறிவு மற்றும் திறன்களை விரிவுபடுத்துகிறது. இந்த அலகுகள் தொழில்நுட்பங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் செழுமைப்படுத்தல், விவசாயிகளுக்கான பயிற்சிகளை ஏற்பாடு செய்தல் RPCs இன் கீழான நோய் கண்டறியும் களப்பயணங்கள், விழிப்புணர்வு செயற்பாடுகள், செய்துகாட்டல்கள், குழு கலந்துரையாடல்கள் மற்றும் வெளிக்கள தினம் போன்ற முக்கியமான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. அவை பெருந்தோட்ட துறையினரை தெளிவுபடுத்தவதற்காக தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான கருமங்களாகும்.

பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு

நாட்டில் உள்ள பல்வேறு தொழில்த்துறை தொழில்நுட்ப முகாமைத்துவ மற்றும் ஆராச்சி நிறுவனங்களுடன் நாங்கள் செயற்திறன் மிக்க தொடர்பிலிருந்தோம் இந்த நல்லுறவை மேற்கொள்வதன் இரட்டைநோக்கம் மாணவர்களுக்கு போதுமான தொழில்நுட்பா ளிப்பாடு, தொழில்துறை பயிற்சி அளிக்கப்படுவதையும் அதன்பின் அவர்களின் அபிலாசைகள் மற்றும் நோக்கங்களுடன் பொருந்தகூடிய நிறுவனங்களில் வேலைவாய்ப்பை பெறுவதையும் உறுதிசெய்வதாகும்
எங்கள் மாணவர்களில் பெரும்பாலானோர் பல்வேறுவகையான வேலைவாய்ப்பு நிலையங்களில் தொழில்துறையில் உள்ளனர்.

மூலோபாய வளர்ச்சி இலக்குகள்

2022 ஆண்டளவில் இந்த துறையுடன் இணைக்கப்பட்டுள்ள மனித வளத்தின் ஆற்றல் மற்றும் திறன்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் பெருந்தோட்ட தொழில் துறை தொடர்பான தேசிய தொழில் தராதரத்தை (NVQ) மேம்படுத்துவதன் மூலம் மூன்று பட்டம் வழங்கும் பாடநெறிகளை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளது. 2022 ஆண்டளவில் நிறுவனம் இந்த பணியை நிறைவேற்ற திட்டமிட்டிருந்தாலும் பல்வேறு நியாயமான காரணங்களாலும் சூழ்நிலைகளாலும் தாமதமானது. தொழில்துறையின் ஆராய்ச்சி மற்றும் மேம்படுத்தலின் பேண்தகு தன்மைக்கு முக்கியமான பங்கு வகிக்கும் எமது அடுத்த இடைக்கால திட்டத்தின் மூலம் சுயாதீன பட்டம் வழங்கும் செயற்பாட்டை ஆரம்பிப்பதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

2019 - 2022 மூலோபாய இலக்குகளை அடுத்த நான்கு ஆண்டுகளில் என்ன நாங்கள் அடைய வேண்டும் என்பதற்கான கண்ணோட்டம் பின்வருமாறானதாகும். அவையாவன,

- ***மூலோபாய இலக்கு 1*** *: பெருந்தோட்ட துறைக்கு தரமான சேவைகளை வழங்குவதற்காக கல்வி பீடத்தை வலுவூட்டுதல் மற்றும் நிறுவன மனித வளங்களை மேம்படுத்துதல்.*
- ***மூலோபாய இலக்கு 2*** *: பரந்த அங்கீகாரத் துடனான சந்தைப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல் செயற்பாடுகளை வலுப் படுத்துவதற்காக முக்கியமான துறைகளில் உயர் தரமான கல்வி திட்டங்களை வழங்குவதில் நிபுணத்து வத்துடனான நற்பெயரை விரிவுபடுத்துதல்.*
-
- ***மூலோபாய இலக்கு 3*** *: தர முகாமைத்துவ முறைமை (QMS) உடனான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பசுமை சூழலை உருவாக்குதல்.*

வெளிப்படையாக, நிறுவனத்தில் அதன் ஆசிரியர்கள், ஊழியர்கள் அத்துடன் அதன் நலன் விரும்பிகள் மற்றும் ஆதரவாளர்கள் உன்மையிலேயே பெருமைப்படக்கூடிய விடயங்கள் நிறைய உள்ளன ஆனால் பிராந்திய மையங்களின் முன்னேற்றம் மற்றும் பயன்பாடு போதுமானதாக இல்லை என்பது உன்மை இருப்பினும் நாம் இன்னும் நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது. நாங்கள் ஏற்கனவே சிறப்பாக செய்த விடயங்களை தொடர்நது செய்வோம் நிறுவனம் கவனம் செலுத்தும் பின்வரும் புதிய பகுதிகளில் விருத்திசெய்ய வேண்டிய தேவையுள்ளது.

1. உள்நாட்டு, வெளிநாட்டு மாணவர்களை கவர்ந்திழுக்கும் வகையில் சிறப்பான உபகரணங்களுடனான நவீன உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் அடுத்த தசாப்பதங்களில் சிறந்த கல்விப்பணிகளை ஆற்றுவதற்கு உகந்ததாக அமையும்.

2. நிறுவனத்தக்கு பெருமை சேர்க்கக்கூடிய அனுபவம் மிக்க மிகச்சிறந்த பிரயோக அறிவுடையவர்களை ஆட்சேர்ப்பு செய்தல்.

3. பெருந்தோட்ட தொழில்துறையில் ஆர்வம் காட்டும் மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களை வழங்குவதன் மூலம் சிறப்பாக செயற்படும் நிலையமாக இருத்தல். ஆனால் அதற்கான நிதி நிலைத்தன்மை இல்லை நிதி திரட்டுவதற்கான நமது முயற்சிகளை கணிசமாக அதிகரிக்க வேண்டும்.

4.புலமைசார் உலகம் மற்றும் மூலோபாய தொழில்துறை கூட்ட முயற்சிகளை உருவாக்குதல். உலகின் உயர்மட்ட பல்கலைக்கழகங்களின் பங்காளர்களாக இருக்க விரும்பும் அதேவேளை இலங்கையில் சிறந்த பட்டதாரிகளை உருவாக்கும் செயற்பாடுகளில் ஈடுபட விரும்புகிறோம்.

நிறைவு

நிறைவாக, நாம் வளரும் போது புதுமை மற்றும் பங்களிப்பின் உணர்வைத் தக்கவைத்து மேம்படுத்துவதற்கான புதிய வழிமுறைகளை கண்டுபிடிக்க வேண்டும் மேலும் மக்கள் விடயங்களைச் செய்ய அதிகாரம் பெற்றவர்களாக உணரும்

உற்சாகமான சூழலைப் பேண வேண்டும். என்பதைக் குறிப்பிடுவதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன். சவால்கள் புத்தாக்கம் நிறுவன சுய மதிப்பீட்டிற்கு வழங்கப்பட்ட பங்களிப்பு மற்றும் இறுதியாக நிறுவனம் முன்னேற்மடைய வழிகாட்டல் மற்றும் ஆதரவு வழங்கிய பெருந்தோட்ட கைத்தொழில் மற்றும் விவசாய ஏற்றுமதி கௌரவ அமைச்சர், பெருந்தோட்ட கம்பனி மறுசீரமைப்பு, தேயிலை மற்றும் இறபர் பெருந்தோட்டங்கள் தொடர்பான பயிர்செய்கை மற்றும் தொழிற்சாலை நவீனமயப்படுத்தல் மற்றும் தேயிலை மற்றும் இறபர் மேம்படுத்தல் இராஜங்க அமைச்சர். பெருந்தோட்ட அமைச்சின் செயலளார், பெருந்தோட்ட கம்பனி மறுசீரமைப்பு, தேயிலை மற்றும் இறபர் பெருந்தோட்டங்கள் தொடர்பான பயிர்செய்கை மற்றும் தொழிற்சாலை நவீனமயப்படுத்தல் மற்றும் தேயிலை மற்றும் இறபர் மேம்படுத்தல் இராஜங்க அமைச்சின் செயலளார். மற்றும் பெருந்தோட்ட இராஜங்க அமைச்சு மற்றும் பெருந்தோட்ட அமைச்சின் ஏனைய அதிகாரிகளுக்கும், NIPM குடும்ப உறுப்பினர்களுக்கும் விஷேடமாக நிறுவனத்தின் தவிசாளர்க்கும் இந்த ஆண்டு வெற்றி பெற பெரும் ஆதரவுக்கும் நான் நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்

ஒப்பம்.
கலாநிதி. கே.எச்.ஜி.எம்.பிரசாத் தர்மசேன,
பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அலுவலர்
தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்.

05.08.2021

நிறுவனத்தின் உருவாக்கம் மற்றும் நிறுவனத்தின் நோக்கங்கள்



தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனமானது 1979 ஆம் ஆண்டின் 45 இலக்க சட்டத்தின் மூலம் 1979 ஆம் ஆண்டு ஜுலை நிறுவப்பட்டது. NIPM நிறுவனத்தினை அரசாங்கத்தின் சட்டரிதியான அமைப்பான, மிகவும் பயனுள்ள சாத்தியமான நிறுவனமாக மாற்றியமைக்க 1981 ஆண்டின் 76 ஆம் இலக்க சட்டத்தின் ஊடாகவும் 1987 ஆண்டின் இல.05 சட்டம் மற்றும் 2003 ஆண்டின் இல.38 சட்டம் ஆகிய சட்டங்களால் திருத்தியமைக்கப்பட்டது. நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் எம்.டி.எச் ஜெயவர்தன மாவத்தையில் அமைந்துள்ளது.

இந்த சட்டம் மற்றும் அதன் திருத்தங்களுக்கு அமைவாக பயிற்சிநெறிகள் / கற்கைநெறிகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கவும் மற்றும் மூன்று (03) முக்கிய பிரிவின் கீழ் தகுதியான தோட்ட நிறைவேற்று அலுவலர்களுக்கு தொழில்சார் அங்கத்துவம் வழங்கவும் அதிகாரம் வழங்கப்பட்ட ஒரே ஒரு அரசாங்க அமைப்பு NIPM ஆகும். இது சிறு தோட்ட துறை உட்பட பெருந்தோட்ட கைத்தொழிலில் பணிபுரிபவர்களின் தொழில்சார் திறனை உயர்தரத்தில் பராமரிப்பதனை உறுதிப்படுத்துகின்றது

இந்த நோக்கங்களை அடைவதற்கு, NIPM பல்வேறு பயிற்சிநெறிகள், கருத்தரங்குகள் செயலமர்வுகள், பரீட்சைகள் போன்றவற்றை நடத்துகிறது. அத்துடன் பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்களுக்கு ஆராய்ச்சி மற்றும் ஆலோசனை சேவைகளையும் வழங்குகின்றது. அதுமட்டுமன்றி வெளிநாட்டு மாணவர்களுக்கான பயிற்சிநெறிகளை நடத்தும் இயலுமையினையும் கொண்டுள்ளது.

நோக்கங்கள்:

சட்டம் மற்றும் திருத்தப்பட்ட சட்டங்களிற்கு அமைவாக நிறுவனத்தின் பொதுவான நோக்கங்கள் பின்வருமாறு

I. பெருந்தோட்ட துறையில் பணிபுரியும் சகல வகையான ஊழியர்களுக்கும் பெருந்தோட்ட முகாமைத்துவத்துடன் தொடர்புடைய திட்டங்கள் மற்றும் பயிற்சி வசதிகளை சுயமாகவோ அல்லது இலங்கை அல்லது வெளிநாட்டிலுள்ள ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து வழங்குதல்.

II. இந்த துறையிலுள்ள ஊழியர்களுக்கு பெருந்தோட்ட முகாமைத்துவத்தின் வழக்கமான, புத்துணர்ச்சி மற்றும் அறிமுக கற்கையினை வழங்குதல்.

III. பொது மற்றும் தனியார் துறை பெருந்தோட்டங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு பெருந்தோட்ட முகாமைத்துவதில் பயிற்சியளித்தல்.

IV. தேயிலை ஆராய்ச்சி நிலையம், தெங்கு ஆராய்ச்சி நிலையம், இறப்பர் ஆராய்ச்சி நிலையம் மற்றும் தொடர்புடைய ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து டிப்ளோமா கற்கைகளை பொருத்தமான பகுதிகளில் வழங்குவதல்.

V. பெருந்தோட்ட முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தியுடன் தொடர்புடைய கருத்தரங்கு நடத்தல், செயலமர்வுகள், மாநாடுகள் போன்றவற்றுக்கு நிதியுதவியளித்தல், ஆய்விதழ் மற்றும் சஞ்சிகைகளின் வெளியிடுதல்.

VI. இதே போன்ற வேறு அறிவுறுத்தல் ஏற்கனவே வழங்கப்படாதவர்களுக்கு தொழிலாளர் உறவு மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவத்தின் பகுதிகளின்னுடாக ஆய்வுகளை மேற்கொள்தல்.

VII. பெருந்தோட்ட கைத்தொழிலிலுள்ள பெருந்தோட்ட முகாமைத்துவம் கொண்டிருக்கும் மனித சக்தியின் தேவைப்பாட்டிற்கு தேவையான திறனை கொண்டுள்ள நபர்களுக்கு பெருந்தோட்ட முகாமைத்துவம் தொடர்பில் பயிற்சியளித்தல்.

VIII. பெருந்தோட்ட கைத்தொழில் தொடர்பாக இலங்கைக்குள் அல்லது அதற்கு வெளியேயுள்ள எந்தவொரு அரச திணைக்களம், பொது கூட்டுத்தாபனம் அல்லது ஏனைய நிறுவனங்களுக்கு முகாமைத்துவ, தொழில்நுட்ப மற்றும் நிர்வாக ஆலோசனை சேவைகள் வழங்குதல்.

நிறுவனத்தின் அதிகாரம்

I. ஏதாவது ஒரு வழிமுறையில் கையகப்படுத்தி மற்றும் வைத்திருக்க, குத்தகைக்கு வழங்க அல்லது எடுக்க அல்லது வாடகைக்கு, அடகு, உறுதிமொழி, விற்பனை அல்லது எந்தவொரு அசையும் அல்லது அசையா சொத்தை அகற்றுதல்.

II. தேயிலை ஆராய்ச்சி தொடர்பான மாதிரி திட்டங்கள் மற்றும் வெளிக்கள பயிற்சி நிலையங்களை கையகப்படுத்தல், நிறுவுதல், மற்றும் இயக்குதல்.

III. நிறுவனத்தின் நோக்கத்திற்கு தேவையான பொறிகள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை இறக்குமதி செய்தல் மற்றும் நிறுவனத்தின் திறன் மிக்க செயற்பாட்டிற்கு உபகரணங்கள், பணியாளர்கள், நிதி, வேறு ஏதேனும் உதவிகளை பெற்றுக்கொள்ளல்.

IV. பெருந்தோட்ட அபிவிருத்தியின் அனைத்து அம்சங்களிலும் ஆராய்ச்சி நடத்தல் ஊக்குவித்தல், உதவுதல், மற்றும் ஒருங்கிணைத்தல்.

V. நிறுவனம் வழங்கும் எந்தவொரு சேவைகளுக்கும் வரி அல்லது கட்டணங்கள் அறவிடல்.

VI. பணிக்கமர்தல், தொழில் வழங்குதல் ஊதியமழித்தல், மற்றும் அதன் பணியாளர்கள் அல்லது உதவியாளர்களுக்கு ஒழுக்க கட்டுப்பாட்டை நடைமுறைபடுத்தல்.

VII. அதன் ஊழியர்களுக்கு நலன்புரி மற்றும் பொழுதுபோக்கு வசதிகளை வழங்குதல் மற்றும் சேமலாப நிதியை உருவாக்கி பராமரித்தல்.

VIII. நிறுவனத்தின் நிர்வாக விவகாரங்களிற்கு அமைவாக விதிகளை உருவாக்குதல்.

IX. ஆளுநர் சபை அவசியமானதாக கருதினால் எந்தவொரு உறுப்பினர், நிறுவன பணிப்பாளர் அல்லது எந்தவொரு ஊழியரும் பிரதிநிதியாக செயற்பட்டு அதன் வணிகத்தினை வினைத்திறன்மிக்க பரிமாற்றத்தில் ஈடுபடுத்துதல்.

X. அங்கத்துவத்தின் பல்வேறு தரத்திற்கான நுழைவுக்காக விண்னப்பதாரர்களின் தகுதியினை மதிப்பீடுசெய்யதல் மற்றும் நிறுவனத்தின் அங்கத்துவதற்கு அல்லது அனைத்து தரத்திற்கான தகுதிப்பரீடசையினை நடத்துவதற்கும் அல்லது வழங்குவதற்கும் மற்றும் அதுபோன்ற பரீட்சைக்கான கற்கைநெறிக்கு அனுமதியளித்தல் அல்லது வழங்குதல்.

XI. அதன் உறுப்பினர்களின் பொது நடத்தை மற்றும் தொழில்முறை நடவடிக்கைகளில் உயர்தரத்தை பேணுவதலை உறுதி செய்தல்.

XII. பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் முதலீட்டை ஊக்குவித்தல்.

XIII. பெருந்தோட்டங்கள் மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவம் தொடர்பில் தரவுகளை சேகரித்தல், விரிவாக்கம் செய்தல் மற்றும் பெருந்தோட்டங்களின் அபிவிருத்திக்கான சாத்திய தன்மையினை அறிய ஆராய்ச்சிகளை நடத்துதல்.

XIV. பெருந்தோட்ட முகாமைத்துவத்துக்கு பொருத்தமான கொள்கைகள் மற்றும் தொடர்புடைய முகவர்களை ஒருங்கிணைத்தல் தொடர்பில் அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல்.

ஆளுநர் சபை நோக்கம்

2020 ஆம் ஆண்டுகாலத்தில், NIPM அத்துருகிரியவில் பின்வரும் ஆளுநர் சபையின் பொறுப்பினை மேற்பார்வை செய்யும் ஒன்பது (06) ஒன்றுகூடல்கள் நடத்தப்பட்டன.

- நிறுவன நடவடிக்கைகளின் அனைத்து செயற்பாடுகளுக்கும் உயர்ந்த மட்ட இணக்கம் பின்பற்றப்படுதலை உறுதி செய்தல்.
- வெளிப்படைத்தன்மையின் உயர் தரத்தை பேணுவதன் விளைவாக செயற்பாடுகள் மற்றும் அனைத்து பயிற்சி நடவடிக்கைகளிலும் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்தல்.
- நிறுவனத்தின் வளங்களை வினைத்திறனாகவும் மற்றும் விளைதிறனாகவும் வழிநடத்தி விரும்பத்தக்க சிறந்த வெளியீட்டை அதன் பங்குதாரர்களுக்காக கொண்டுவருதல்.
- நிறுவனதின் மத்திய மற்றும் நீண்டகால தந்துரோபாயம், வருடாந்த பாதீடுகள், செயல்முறை திட்டம் மற்றும் கணிசமான நிதியுடனான செயற்பாட்டு கொள்கைகள் என்பனவற்றை அனுமதிப்பதன் முலம் வழிகாட்டுதல்.

1981 ஆண்டின் 76 ஆம் இலக்க சட்டத்தினுடாகவும் 1987 ஆண்டின் இல.05 சட்டம் மற்றும் 2003 ஆண்டின் இல.38 சட்டம் ஆகிய சட்டங்களால் திருத்தியமைக்கப்பட்ட 1979 ஆம் ஆண்டின் சட்ட இல. 45 NIPM இன் 06 அத்தியாயத்திற்கு அமைவாக பின்வரும் உறுப்பினர்கள் 2020 ஆம் ஆண்டுக்கான நிறுவனத்தின் ஆளுநர் சபை ஆக கருதப்படுவார்கள்.

ஆளுநர் சபை தொகுப்பு

சபை உறுப்பினர் பெயர்	பதவி	சபை உறுப்பினர் பெயர்	பதவி
திரு. ஏ.எல்.ஏ.அசோக்க ஸ்ரீவர்தன தவிசாளர்/ NIPM	தவிசாளர்	**திரு. மகிந்த விதானபதிரண** தவிசாளர்/ TSHDA;	உறுப்பினர்
கலாநிதி. பிரசாட் தர்மசேன பணிப்பாளர் /CEO NIPM	உறுப்பினர்	**கலாநிதி. காஞ்சனா சில்வா** பணிப்பாளர் / CEO துருசவிய நிதியம்	உறுப்பினர்
திருமதி. அருனி எஸ் ரணசிங்கே மேலதிகச் செயலாளர் / பெருந்தோட்ட அமைச்சு	உறுப்பினர்	**திரு. ஹிஹ்ரான் டி சில்வா** பிரதிநிதி / SLTFOA	உறுப்பினர்
கலாநிதி. ஐ.எஸ்.பி. அபேசிங்கே பணிப்பாளர் / தேயிலை ஆராய்ச்சி நிறுவனம்	உறுப்பினர்	**திரு. எஸ்.கே.எல். ஒபேயசேகர** பொதுச் செயலாளர் / TPAC	உறுப்பினர்
கலாநிதி. .சீ. எஸ் ரணசிங்கே பணிப்பாளர் / தெங்கு ஆராய்ச்சி நிறுவனம்	உறுப்பினர்	**திரு. பீ.ஏ.எம். தெறனியஹல** பிரதிநிதி / CGASL	உறுப்பினர்
திருமதி. எஸ். என் மீரலாவ பணிப்பாளர், / தேசிய பாதீட்டு தினைக்களம்	உறுப்பினர்		

- திரு. ஏ.எல்.ஏ.அசோக்க ஸ்ரீவர்தன தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் தவிசாளராகவும் ஆளுநர் சபை தவிசாளராக 2020 ஜுலை முதல் நடைமுறைக்கு வரும் வகையில நியமிக்கப்பட்டார்
- திரு. எஸ். என் மீரலாவ (பணிப்பாளர், / தேசிய பாதீட்டு தினைக்கம்) 2020 பெப்ரவரி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டார்
- திரு. மகிந்த விதானபதிரண(தவிசாளர்/ தேயிலை சிறு தோட்ட அபிவிருத்தி அதிகாரசபை பாதீட்டு தினைக்கம்) 2020 பெப்ரவரி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டார்
- கலாநிதி. காஞ்சனா சில்வா (பணிப்பாளர் / CEO துருசவிய நிதியம்) 2020 பெப்ரவரி முதல் நடைமுறைக்கு வரும் வகையில நியமிக்கப்பட்டார்
- கலாநிதி. காஞ்சனா சில்வா (தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்கள் சங்கம்) 2020 மார்ச் முதல் நடைமுறைக்கு வரும் வகையில நியமிக்கப்பட்டார் மற்றும் 2020 டிசம்பரில் ஓய்வுபெற்றார்.

∴ கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் (AMC) அறிக்கை

நிதி அமைச்சினால் வழங்கப்பட்ட வழிகாட்டலுக்கு இணங்க உருவாக்கப்பட்ட நிறுவனத்தின் கணக்காய்வு, முகாமைத்துவ திட்டத்துக்கு பின்வருவனவற்றை மேற்பார்வை செய்யவதற்கு அதிகாரத்தை பணிப்பாளர் குழு முறையாக வழங்கியுள்ளது.

- நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டை உறுதிசெய்தல்.
- கணக்காய்வு ஐயவினாக்கள் மற்றும் கணக்காய்வு அறிக்கையுடன் தொடர்புடைய விடயங்கள் மற்றும் நிறுவனத்தால் வழங்கப்பட்ட பதில்களுக்கான பரிந்துரைகள்.
- பாதீட்டு மதிப்பீடு மற்றும் உண்மையான செயல்திறன் முன்னேற்றம்.
- நிறுவனத்துடன் தொடர்புடைய ஏனைய நிதி நடவடிக்கைகள்.

2020 ஜூலை, 28 நவம்பர் 20 மற்றும் டிசம்பர் 24 ஆகிய திகதிகளில் ஆண்டுக்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் மூன்று நடைபெற்றன.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் தொகுப்பு

உறுப்பினர் பெயர்	பதவி	உறுப்பினர் பெயர்	பதவி
திருமதி. எஸ். என் மீரலாவ பணிப்பாளர், / தேசிய பாதீட்டு தினைக்களம்	தவிசாளர்	**திரு. மகிந்த விதானபதிரண** தவிசாளர்/ TSHDA;	பதில் உறுப்பினர்
திருமதி. அருனி எஸ் ரணசிங்கே மேலதிகச் செயலாளர் / MPI	உறுப்பினர்	**கலாநிதி. பிரசாட் தர்மசேன** பணிப்பாளர் / NIPM	பணிக்குழாம் உறுப்பினர்
கலாநிதி. காஞ்சனா சில்வா பணிப்பாளர் / CEO துருசவிய நிதியம்	உறுப்பினர்	**திரு. எல்.டீ.ஜெ. பிரியந்த** கணக்காளர் / NIPM	பணிக்குழாம் உறுப்பினர்
திரு. ஜயந்த புஸ்பகுமார கணக்காய்வு அத்தியட்சகர் /NAO	கண்காணிப்பு உறுப்பினர்	**திரு. கே.எச்.யு.பீ. விஜேவீர** உள்ளக கணக்காய்வாளர்/ NIPM	செயலாளர் /AMC

- திருமதி. எஸ். என் மீரலாவ (பணிப்பாளர், / தேசிய பாதீட்டு தினைக்கம்) 2020 பெப்ரவரி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டார்
- திரு. ஜயந்த புஸ்பகுமார (கணக்காய்வு அத்தியட்சகர் /NAO) 2020 ஒகஸ்ட் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.
- திரு. எஸ்.யு.டீ. மாணவசிங்கே 2020 நவம்பர் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டார்
- கலாநிதி. காஞ்சனா சில்வா (பணிப்பாளர் / CEO துருசவிய நிதியம்) 2020 பெப்ரவரி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டார்
- திரு. மகிந்த விதானபதிரண (தவிசாளர்/ TSHDA;) 2020 மார்ச் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டார்

நிதி அமைச்சின் பிரதிநிதி திருமதி. எஸ். என் மீரலாவ AMC கணக்காய்வு, முகாமைத்துவ தலைமை வகித்தார். மேற்கூறிய நிர்வாக மற்றும் நிர்வாகமற்ற பணிப்பாளர்கள் 2020 ஆம் ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவில் சேவையாற்றினார்கள்.

நிறுவனத்தின் பணியாளர்கள்

ஆட்சேர்ப்பு திட்டத்துக்கமைய கௌரவ பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ள பணிப்பாளர் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அலுவலர் பொறுப்பில் செயற்படுகிறார். அவரது தலைமையில் 2020 ஆம் ஆண்டின் இறுதியில் மொத்த ஆளணி 55 நிரந்தர பணியாளர்களாக இருந்தது. நிறுவனம் பயிற்சி, நிர்வாகம், நிதி மற்றும் கணக்காய்வு என பிரதானமாக மூன்று பிரிவுகளின் கீழ் செயற்படுத்துகிறது.

தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரி

தவிசாளர் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக நியமிக்ப்பட்ர்.



ஏ.எல்.ஏ.அசோக ஸ்ரீவர்தன
தவிசாளர்



கலாநிதி. பிரசாட் தர்மசேன
பணிப்பாளர் / CEO

பயிற்சி பிரிவி

பயிற்சி பிரிவிலுள்ள பணியாளர்கள் பெயர் மற்றும் பதவி கீழே வழங்கப்பட்டுள்ளது.



திருமதி.
எஸ்.என்.இல்லன்ஹதிலக
தலைவர் - பயிற்சி



திரு.ரி.எச். ஜயதிலக்க
பயிற்சி நிபுணர்
கணக்கியல், நிதி
முகாமைத்துவம்.



திருமதி. ஆர் என்.
லெக்குகெட்டி
பயிற்சி நிபுணர்
(முகாமைத்துவம்)



திரு. ஏச்.ஏம்.வி.எஸ்.
பண்டார.
பயிற்சி அலுவலர்



திரு.பீ.டபிள்யு.ஜி.என்.சீ.
வீரக்கோன்
பயிற்சி அலுவலர்
(முகாமைத்துவம்)



திரு.N.S.கெரியாராச்சி
நூலக அலுவலர

.

கணக்கீட்டு பிரிவு

கணக்கீட்டு பிரிவிலுள்ள பணியாளர்கள் மற்றும் பதவி கீழே வழங்கப்பட்டுள்ளது.



திரு. L.D.J. பிரியந்த
கணக்காளர்



திருமதி. N.L.சேனதிரா
உதவி காணக்காளர

நிர்வாக பிரிவு

நிர்வாக பிரிவிலுள்ள பணியாளர்கள் பெயர் மற்றும் பதவி கீழே வழங்கப்பட்டுள்ளது.



திரு M.L.R.ஜயன்த
நிர்வாக உத்தியோகத்தர்



திரு M.B.M.A.L.பண்டாரநாயக்க
ஹெட்டல் முகாமையாளர்-
அத்துருகிரிய

பரீட்சைப் பிரிவு

பரீட்சைப் பிரிவிலுள்ள பணியாளர்கள் பெயர் மற்றும் பதவி கீழே வழங்கப்பட்டுள்ளது.



திரு D.I.P.குலசேகர
பயிற்சி உத்தியோகத்தர்
விவசாயம் பொருளியல்



திருமதி . J.A.D.G.M.இந்திராணி
நிகழ்ச்சிச்திட்ட
உத்தியோகத்தர்
பரீட்சை இணைப்பாளர்

உள்ளக கணக்காய்வு பிரிவு



திரு. K.H.U.P.விஜயவீர
உள்ளக கணக்காய்வாளர்

31/12/2020 **உள்ளவாறான உண்மையான மொத்த ஊழியர்கள் பின்வருமாறு**

பயிற்சி பிரிவு (மொத்த ஊழியர் -15)

பயிற்சி நிபுணர் (விவசாய பொருளாதாரம்)	01
பயிற்சி நிபுணர் (முகாமைத்துவம்)	01
பயிற்சி நிபுணர் (கணக்கீடு மற்றும் நிதி முகாமைத்துவம்)	01
பயிற்சி அலுவலர் (முகாமைத்துவம்)	01
பயிற்சி அலுவலர் (கணக்கீடு மற்றும் நிதி முகாமைத்துவம்)	01
ஊழியர் உதவியளர் (பயிற்சிநெறி)	01
நூலகர்	01
முகாமைத்துவ உதவியளர்	07
செவிப்புல, கட்புல உதவியளர்	01

நிதிப்பிரிவு (மொத்த ஊழியர்கள் - 7)

கணக்காளர்	01
கணக்கிட்டு உதவியாளர்	01
முகாமைத்துவ உதவியாளர்	05

நிர்வாக பிரிவு (மொத்த ஊழியர் - 28)

உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்.)	-
நிர்வாக அலுவலர்	01
விடுதி முகாமையாளர்	01
பெறுகை உதவியாளர்	-
முகாமைத்துவ உதவியாளர்	06
சாரதி	07
தோட்ட பணியாளர்	02
அலுவலக பணியாளர்	05
விடுதி பணியாளர்	03
அச்சிடும் உதவியளர்	01
தொழிலாளி	02

பரீட்சை பிரிவு (மொத்த ஊழியர் - 03)

பயிற்சி உத்தியோகத்தர்	01
நிகழ்ச்சிதிட்ட உத்தியோகத்தர்	01
முகாமைத்துவ உதவியாளர்	01

உள்ளக கணக்காய்வு பிரிவு (மொத்த ஊழியர்கள் – 1)

உள்ளக கணக்காய்வு	01


நிர்வாகத்தின் மீள்ளாய்வு

உதவி பணிப்பாளர் (நிர்வாகம்) நிர்வாகத்தின் தலைவர் ஆவார். அவர் நிறுவனத்தின் பொதுவான நிர்வாகத்துக்கு பொறுப்பானவர். ஊழியர் ஆட்சேர்ப்பு, மனிதவள மேம்படுத்தல் போன்ற பணியாளர்களுடன் தொடர்புடைய அனைத்து விடயங்களும் நிர்வாக பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. கட்டிடங்களின் புணர்நிர்மானம் மற்றும் மேம்படுத்தல் உள்ளடங்கலாக அனைத்து பெருட்களின் கொள்முதல் நடவடிக்கை இந்த பிரிவினால் வழிநடத்தப்படுகின்றது.

நிறுவனம் தங்குமிட வசதிகளை அத்துருகிரிய மற்றும் பொகவந்தலாவ மத்திய நிலையங்களினுடாக ஏனைய நிறுவனங்களுக்கு அத்தகைய தேவை ஏற்படும் சந்தர்ப்பத்தில் வழங்குகின்றது. வாடகைக்கு வழங்கும் செயற்பாட்டிலிருந்து உழைக்கும் வருமானத்தை அதிகரிக்க நிறுவனம் தனது சேவையின் தரத்தை மேலும் அதிகரிக்க ஏற்பாடுகளை செய்துள்ளது. 2020 ஆண்டு காலப்பகுதியில், ஆளணி பதவி வெற்றிடங்கள் காணப்படுமாயின் அதனை அங்கிகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டத்திற்கு அமைய நிறுவனத்தால் பூர்திசெய்யமுடியும்.

ஊழியர் நன்மைகள்

ஊழியர்களின் தொழில் வளர்ச்சியை விருத்திசெய்வதற்கு ஊழியர்களின் வேண்டுகோளுக்கு அமைய உள்நாட்டு மற்றும் சர்வதேச பயிற்சிநெறிகளை வழங்கி சேவையில் அவர்களது அறிவு, திறனை முன்னேற்றுவதற்கு முகாமைத்துவம் அவர்களுக்கு வழிகாட்டியது. 2019 முன்னர் மேலோங்கியிருந்த நிறுவன நலன்புரி திட்டம், 2020 ஆம் ஆண்டும் தொடரப்பட்டது



TS - பயிற்சி நிபுணர் .TO - பயிற்சி அலுவலர் AE - விவசாய பொருளாதாரம் A&FM - கணக்கீடு நிதி முகாமைத்துவம் Mgt. - முகாமைத்துவம் E & C. -பரீட்சை & ஒருங்கிணைப்பு

COE - பரீட்சை கட்டுப்பாட்டாளர் * தர கட்டுப்பாட்டு அலகு தலைவர் ** அடக்கப்பட்டது

நிறுவனத்தின் முதன்மைச் செயற்பாடுகள்

பயிற்சிநெறிகள் / கற்கைநெறிகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்தோருக்கு சான்றிதழ் வழங்கல் மற்றும் தகுதியான பெருந்தோட்ட நிறைவேற்று அலுவலர்களுக்கு தொழில்சார் அங்கத்துவம் வழங்கும் அதிகாரம் வழங்கப்பட்ட ஒரே ஒரு அரசாங்க அமைப்பு தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம் NIPM ஆகும். தேயிலை, இறப்பர், கரும்பு, மரமுந்திரிகை, கறுவா மற்றும் பனை போன்ற பயிர்செய்கையில் ஈடுபடும் சிறு தோட்ட துறை உட்பட பெருந்தோட்ட கைத்தொழிலில் பணிபுரிபவர்களின் உயர்தர தொழில்சார் திறனை பராமரிப்பதனை உறுதிப்படுத்துகின்றது.

நிறுவனத்தின் நோக்கத்தை அடைவதை இலக்காக கொண்டுள்ள நிறுவனத்தின் முதன்மை செயற்பாடுகள் பிரதானமாக 07 பகுதிகளாக வகைப்படுத்தப்பட்டு கீழே பட்டடியலிடப்பட்டுள்ளது.

(அ) கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள்

கல்வி கற்கைநெறிகள் குறிப்பாக பங்குபற்றுபவர்களின் திறன்களை உயர்த்துதல் மற்றும் அவர்களது ஆற்றலை அதிகரிக்க வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த கற்கைநெறிகளுக்கான சான்றிதழ்களை வழங்குவதற்காக பங்குபற்றுபவர்கள் திருப்திகரமான கல்வி பதிவை பேணியிருக்க வேண்டும். அத்துடன் அவர்களால் உள்வாங்கப்பட்டுள்ள பாட தொகுதிகளில் குறிப்பிட்டுள்ள கடமைகளை பூர்த்தி செய்ய வேண்டும்.

கல்வி திட்டங்கள் என்ற வகையில் பின்வரும் கற்கைநெறிகள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

- பெருந்தோட்ட முகாமைத்துவம் B.Sc. பட்டம் (வயம்ப பல்கலைக்கழகத்துடன் இணைந்து).
- பெருந்தோட்ட முகாமைத்துவ தேசிய டிப்பிளோமா.
- பெருந்தோட்ட பயிர் தொழில்நுட்ப உயர் தேசிய டிப்பிளோமா. (NVQ பாடநெறிகள் மட்டம் 06)
- பெருந்தோட்ட விரிவாக்கல் முகாமைத்துவ தேசிய டிப்பிளோமா.
- பெருந்தோட்ட பயிர் தொழில்நுட்ப தேசிய டிப்பிளோமா. (NVQ பாடநெறிகள் மட்டம் 05)
- பெருந்தோட்ட முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப தேசிய டிப்பிளோமா.(பண்ணை பயிலுனர்)
- தெங்கு பயிர்ச்செய்கை மற்றும் பதப்படுத்தல் உயர்தர சான்றிதழ் பாடநெறி.
- பெருந்தோட்ட கணக்கீடு, நிதி மற்றும் கிரய முகாமைத்துவ உயர்தர சான்றிதழ் பாடநெறி. (CMA உடன் இணைந்து)
- கணக்கு பதிவு மற்றும் பெருந்தோட்ட கணக்கீட்டு சான்றிதழ் பாடநெறி.
- நுண்நிதி சான்றிதழ் கற்கைநெறி
- NVQ பாடநெறிகள் மட்டம் 4-5





(ஆ) தொழில்சார் கற்கைநெறிகள்



தொழில்சார் கற்கைநெறிகளை நடத்துவதற்கான பிரதான நோக்கம் தர்க்கரிதியான / செயல்முறை ரிதியான அறிவு மற்றும் திறன்களை பொருந்தோட்ட கல்வியின் பல்வேறு அம்சங்களில் வழங்குவதாகும். இந்த கற்கைநெறியானது பங்குபற்றுபவர்களின் எதிர்கால தொழில் விருத்தி, மதிப்பீடு மற்றும் அவர்களது ஆற்றலை அதிகரிப்பதற்குமாக இந்த கற்கைநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது.

நிறுவனத்தினால் நடாத்தப்படும் தொழில்சார் பாடநெறிகள் பின்வருமாறு.

- தேயிலை உற்பத்தி தொழிற்சாலை நடைமுறை
- இறப்பர் உற்பத்தி தொழிற்சாலை நடைமுறை
- மொழி தேர்ச்சி பரீட்சை

(இ) ஆற்றல் விருத்தி பாடநெறிகள்

இந்த பிரிவின் கிழ் உள்ள பாடநெறிகள் குறிப்பபிட்ட வேலைகளுடன் நேரடியாக தொடர்பு கொண்டுள்ள திறன் மற்றும் செயல் வல்லமையை மேம்படுத்துவதற்காக விசேடமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. பங்குபற்றுபவர்கள் நவீன தொழில்நுட்பம் மற்றும் வேலை விபரத்துடன் தொடர்புடைய மேம்பாட்டு முறைகளை் நன்கு அறிந்திருத்தல் வேண்டுமென எதிர்பார்கப்படுகின்றது. இந்த வகையின் கீழ் 2020 ஆம் ஆண்டில் தனியார் துறையுடன் இணைக்கப்பட்டுள்ள அதிகாரிகளின் பணி விபரங்களில் அறிவு மற்றும் திறன்களை மேம்படுத்துதற்காக, பணியாளர்கள் மேம்பாட்டுத்திட்டங்களை நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

நிறுவனத்தினால் நடாத்தப்படும் ஆற்றல் விருத்தி பாடநெறிகள் பின்வருமாறு. செயலமர்வு, கருத்தரங்கு மற்றும் மாநாடு



- தொழில்நுட்ப அபிவிருத்தி பாடநெறிகள்
- திறன் விருத்தி பாடநெறிகள்
- தொழிலாளர் அபிவிருத்தி பாடநெறிகள்
- முகாமைத்துவ அபிவிருத்தி பாடநெறிகள்
- பணியாளர் அபிவிருத்தி பாடநெறிகள்
- செயலமர்வு மற்றும் விசேட பாடநெறிகள்
- சிறு தோட்ட உரிமையாளர்களுக்கான பாடநெறிகள்

(ஈ) பெருந்தோட்ட முகாமைத்துவத்துடன் தொடர்புடைய வெளியீடுகளை வழங்குதல் (பெருந்தோட்ட முகாமைத்துவத்தின் சஞ்சிகை, செய்தி மடல், பயிற்சிதிட்டங்களின் மாணவர் கையேடுகள், பாட நூல் மற்றும் ஏனைய பருவகால வெளியீடுகள்.)

(உ) பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் ஆராய்ச்சி மற்றும் ஆலோசனை சேவை வழங்கப்படுவதுடன், பொது / தனியார் துறை நிறுவனங்களுக்கான ஊழியர்களை தெரிவுசெய்தல் மற்றும் பதவி உயர்தலுக்கான நுண்ணறிவு சோதனைகள் மற்றும் பரீட்சைகள் (வாய்மொழி, எழுத்து) நடத்துதல்.

(ஊ) தகுதியான பெருந்தோட்ட நிறைவேற்று அலுவலர்களை நிறுவனத்தின் தொழில்சார் உறுப்பினர் களாக உறுதிப்படுத்துதல். (கௌரவ உறுப்பினர், சக உறுப்பினர், இணை உறுப்பினர், மாணவ உறுப்பினர்) வழங்குதல்.

(எ) வெளி நிறுவனங்களுக்கு அவர்களுடைய பாடநெறிகள் மற்றும் தொடர்புடைய செயற்பாடுகளுக்கு நிறுவனத்தின் வசதிகளை (உணவு, தங்குமிட மற்றும் விரிவுரை மண்டபம்) வழங்குதல்.

பாயிற்சிநெறிகளின் முன்னேற்ற மிளய்வு

நிறுவனம் அடிப்படையாக இரண்டு பிரிவுகளுக்கு பாடநெறிகளை நடத்துகின்றது, அதாவது பெருந்தோட்ட கூட்டாணமை துறைக்கான **வருமான உழைப்பு திட்டங்கள்** மற்றும் விசேடமாக சிறு தோட்ட உரிமையாளர்கள் துறை **இயலளவை அபிவிருத்தி செய்யும் திட்டங்கள்** அரச நிதியை பயன்படுத்தி இலவசமாக நடத்தப் படுகின்றது.

நாட்டின் சவால் மிகு சுற்றுச்சூழல் நிலைமையை எதிர்கொள்ள NIPM நிகழ்நிலை கல்வி முறைக்கு மாற்றப்பட்டது. பெருந்தோட்டத்துறை தொடர்பான புதிய இணையப் வழி செயலமர்வுகளை அறிமுகப்படுத்தியதுடன் மேற்கூறிய தொழில்நுட்பத்தினுடாக நடைபெறும் வேலைதிட்டங்களை நிறைவுசெய்ய முடியும்.

வருமானம் ஈட்டும் பாடநெறிகள்

நிறுவனம் 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிறுவனத்திற்கு வருமானத்தினை ஈட்டுவதற்காக கல்வி மற்றும் தொழில்சார் பாடநெறிகளை ஆரம்பித்தது.

2020 இல் வருமானம் உழைக்கும் பாடநெறிகள் விபரங்கள்

இல	நிழ்ச்சித்திட்ட வகை	காலப்பகுதி	நிழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை	பங்குபற்றியோர் எண்ணிக்கை
கல்வித்திட்டங்கள்				
01	பெருந்தோட்ட முகாமைத்துவ தேசிய டிப்ளோமா	18 மாதங்கள்	1	15
02	பெருந்தோட்ட விரிவாக்கல் முகாமைத்துவ தேசிய டிப்பிளோமா.(NVQ 05)	18 மாதங்கள்	1	32
தொழில்நுட்ப அபிவிருத்தி நிழ்ச்சித்திட்டங்கள் (கேள்வியின் அடிப்படையில்)				
03	தேயிலை சுவை பார்த்தல் மற்றும் தரப்படுத்தல்	03 நாட்கள்	1	14
முகாமைத்துவ அபிவிருத்தி நிழ்ச்சித்திட்டங்கள் (கேள்வியின் அடிப்படையில்)				
04	CRI அலுவலர்களுக்கான உற்பத்தித்திறன் மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம்	01 நாட்கள்	1	43
திறன் அபிவிருத்தி நிழ்ச்சித்திட்டங்கள்				
05	தேயிலை தொழிற்சாலை அலுவலர்கள்	05 நாட்கள	1	14
தொழிலாளர் அபிவிருத்தி நிழ்ச்சித்திட்டங்கள்				
06	தொழிலாளர் திறன் அபிவிருத்தி	01 நாட்கள்	1	35
07	திறன் அபிவிருத்தி திட்டம்	01 நாட்கள்	1	65
நிகழ்நிலை செயலமர்வு				
08	இலங்கை பெருந்தோட்ட துறையில் காலநிலை மாற்றத்திற்கு இசைவாக்கம் அடைதல் மற்றும் வலுப்படுத்தவதற்கான நிகழ்நிலை செயலமர்வு	01 நாட்கள்	1	12
09	நிலச்சட்டம் மற்றும் அக்கிரமிப்பு விடயங்களை கையாளுதல்	01 நாட்கள்	1	25
பணியாளர்கள் அபிவிருத்தி நிழ்ச்சித்திட்டங்கள்				
10	கணக்காய்வு ஐயவினாவிற்கு எவ்வாறு பதிலளித்தல்	01 நாட்கள்	1	29
11	ஒழுக்காற்று நடைமுறை தொடர்பான விழிப்புனர்வு நிகழ்ச்சித்திட்டம்	01 நாட்கள்	1	12
12	அலுவலக நடைமுறை தொடர்பான செயலமர்வு	01 நாட்கள்	1	42
விஷேட நிழ்ச்சித்திட்டங்கள்				
13	திறுசவியா நிதி பயிற்சி திட்டம்	02 நாட்கள்	1	25
14	இயந்திர பரமாரித்தல் தொழில்நுட்பம்	01 நாட்கள்	1	19
13 ஆண்டு கல்வி நிழ்ச்சித்திட்டங்கள்				
15	தேயிலை தொழிற்சாலை அலுவலர்கள் மற்றும தேயிலை வெளிக்கள் அலுவலர்கள	06 மாதங்கள்	3	71
	மொத்தம்		**17**	**453**

அட்டவணை இல.01

மேற்கூறப்பட்டதற்கு அப்பால் பரீட்சைகள் மற்றும் கல்விசார் காலத்தில் நிறைவு செய்வதற்கு முன்னைய ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பின்வரும் கல்விசார் திட்டங்கள் நிறுவனத்தினால் தொடரப்பட்டது.

2019 இல் இருந்து தொடரப்படும் கல்வி திட்டங்கள்

இல	திட்டத்தின் பெயர் மற்றும் வகை	நடாத்ததிய பயிற்சிகளின் எண்ணிக்கை	ஓவ்வொரு பயிற்சிக்குமான காலம்	பங்கேற்றோர் எண்ணிக்கை.
01	பெருந்தோட்ட முகாமைத்துவ தேசிய டிப்பிளோமா	01	18 மாதங்கள்	17
02	பெருந்தோட்ட விரிவாக்கப்பட்ட முகாமைத்துவ தேசிய டிப்பிளோமா	01	18 மாதங்கள்	29
03	பெருந்தோட்ட பயிர் தொழில்நுட்ப டிப்பிளோமா	01	12 மாதங்கள்	20
04	பெருந்தோட்ட பயிர் தொழில்நுட்ப உயர் தேசிய டிப்பிளோமா. (NVQ பாடநெறிகள் மட்டம் 06)	01	12 மாதங்கள்	16
05	பெருந்தோட்ட பயிர் தொழில்நுட்ப தேசிய டிப்பிளோமா. (NVQ பாடநெறிகள் மட்டம் 05)	01	12 மாதங்கள்	23
06	பெருந்தோட்ட முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப தேசிய டிப்பிளோமா.	01	12 மாதங்கள்	15
07	தேயிலை உற்பத்தி மற்றும் தொழிற்சாலை நடைமுறை நிபுணத்துவ பாடநெறி.	01	09 நாட்கள்	21
08	பெருந்தோட்ட கணக்கீடு மற்றும் நிதி முகாமைத்துவ சான்றிதழ் பாடநெறி.	01	14 மாதங்கள்	15
09	கணக்கு பதிவு மற்றும் பெருந்தோட்ட கணக்கீட்டு சான்றிதழ் பாடநெறி.	01	12 மாதங்கள்	16
10	நுண்நிதி சான்றிதழ் கற்கைநெறி	01	10 நாட்கள்	25
	மொத்தம்	**10**		**197**

அட்டவணை இல. 02

வருமானம் ஈட்டும் பயிற்சிகளின் முன்னேற்றம் - 2020



27 பயிற்சிகள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தன நிறுவனம் 17 திட்டங்களை நிறைவு செய்தது. 2019 ஆண்டில் நடத்தப்பட்ட பயிற்சி எண்ணிக்கையின் முன்னேற்றம் 62 % ஆகும். ஆண்டின் இறுதியில் நிறுவனம் எதிர்பார்த்ததை விடவும் பயிற்சி வருமானத்தில் 59 % நிதி முன்னேற்றத்தை அடைந்தது. 2020 ஆம் ஆண்டின் பயிலுனர்களின் எண்ணிக்கை 453 ஆக இருந்தது. இது திட்டமிடப்பட்ட இலக்கு 507 இல் 90 % ஆகும். 2020 ஆண்டு கால ப்பகுதியல் கொவிட் 19 நோய்பரவல் நிலைமை காரணமாக பயிற்சி முன்னேற்றத்தில் பாதகமாக அறிகையிடப்பட்டுள்ளது

2019 ஆம் ஆண்டுக்கான பயிற்சிகளின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம்

பயிற்சியின் பெயர்	பாதிடப்பட்டது			உண்மையானது			முன்னேற்றம்		
	பயிற்சிகளின் எண்ணிக்கை	மாணவர்களின் எண்ணிக்கை	வருமானம்	பயிற்சிகளின் எண்ணிக்கை	மாணவர்களின் எண்ணிக்கை	வருமானம்	பயிற்சிகளின் எண்ணிக்கை	மாணவர்களின் எண்ணிக்கை	வருமானம்
கல்விசார் பயிற்சி	8	157	11.51	2	47	0.96	25மூ	27மூ	8மூ
திறன் அபிவிருத்தி பயிற்சி	2	29	0.81	1	14	0.28	50மூ	48மூ	35மூ
தொழில்நுட்ப அபிவிருத்தி	1	14	0.46	1	14	0.46	100மூ	100மூ	100மூ
விசேட செயலமர்வு மற்றும் பயிற்சி திட்டம்	10	119	0.75	7	164	0.52	70மூ	138மூ	69மூ
முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி பயிற்சி	3	58	0.44	1	43	0.29	33மூ	74மூ	64மூ
ஏஞ மட்டம் 13 ஆண்டு கல்வி திட்டம்	2	70	25.06	3	71	13.48	150மூ	101மூ	53மூ
தெழிலாளர் அபிவிருத்தி	1	60	0.03	2	100	0.06	200மூ	200மூ	200மூ
மொத்தம்	27	507	39.06	17	453	16.05	62மூ	90மூ	41மூ
வெளியக பரீட்சை	-		0.86	-	-	0.94	-	-	109மூ
நடைபெறும் கல்விசார் திட்ட வருமானம் 2019.˙.2020	-		-	-	-	6.60	-	-	-
ஏனைய பயிற்சி திட்ட வருமானம்	-		-	-	-	0.14	-	-	-
மொத்த கல்விசார் வருமானம்	**27**	**507**	**39.92**	**17**	**453**	**23.73**	**62மூ**	**90மூ**	**59மூ**

அட்டவணை இல . 03



வரைபடம் 01



வரைபடம் 02

வருமானம் ஈட்டும் பயிற்சிகளின் இலாப மற்றும் நட்ட பகுப்பாய்வு

நிறுவனம் வருமானம் ஈட்டுவதற்காக பெயரளவிலான உயர் கற்கைநெறி கட்டணத்தை அறவீடு செய்வதனுடாக பல்வேறு வகையான கல்விசார், தொழில்சார் மற்றும் திறன் அபிவிருத்தி பயிற்சிகளை நடத்துகிறது. 2020 ஆம் ஆண்டு காலத்தில், நிறுவனம் ரூபா 14.66 மில்லியன் மொத்த பயிற்சி வருமானத்தல் சராசரி இலாப எல்லை 62 வீதத்துடன் பயிற்சி வருமானத்திலிருந்து 23.58 மில்லியன் தேறிய வருமானமாக பதிவாகியிருந்தது. கடந்த வருட புள்ளிவிபரங்களுக்கு அமைய இது ரூபா 43.89 மில்லியன் ஆகும். பயிற்சி வருமானத்திலிருந்து ரூபா 69.01 மில்லியன் தேறிய வருமானமாக பதிவாகியிருந்தது. ஆகவே கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் தேறிய வருமானம் 77 % குறைடைந்தும் பயிற்சி மிகையாகவும் காணப்படுகின்றது.

கற்கைநெறியின் ஒவ்வொரு வகைக்கான இலாப மற்றும் நட்ட பகுப்பாய்வு பின்வரும் அட்டவணை இல 04 இல் தரப்பட்டுள்ளது.

பயிற்சின் பெயர்	வருமானம் (ரூபா.மில்)	கிரயம் (ரூபா.மில்)	இலாபம்/ நட்டம்	இலாப எல்லை
கடந்த வருட பிரிவு உள்ளடங்கலாக கல்விசார் மற்றும் தொழில்சார் பயிற்சிநெறி	7.55	3.11	4.44	58%
முகாமைத்துவ அபிவிருத்தி	0.29	0.17	0.12	41%
தொழில்நுட்ப அபிவிருத்தி	0.46	0.13	0.33	72%
திறன் அபிவிருத்தி	0.28	0.14	0.14	50%
தொழிலாளர் அபிவிருத்தி பயிற்சிநெறி	0.06	0.04	0.02	33%
செயலமர்வு மற்றும் விசேட பயிற்சிநெறி	0.52	0.18	0.34	65%
13 வருட கல்வி உத்தரவாத திட்டங்கள்	13.48	4.61	8.87	65%
வெளிவாரி பரீட்சை வருமானம்	0.94	0.54	0.40	42%
மொத்தம்	**23.58**	**8.75**	**14.66**	**62%**

அட்டவணை இல. *04*

தோட்ட உரிமையாளர்களுக்கான ஆற்றல் அபிவருத்தி பயிற்சிகள் – 2020

சிறு தோட்ட துறையின் முக்கியத்துவம், பெருந்தோட்ட துறைக்கு அவர்களின் பங்களிப்பு மற்றும் இந்த துறைக்கான மனித வள விருத்தியின் முக்கியத்துவம் என்பனவற்றை நிறுவனம் இனங்கண்டுள்ளது. இந்த தகவலை திறைசேரிக்கு வழங்குவதன் முலம் சிறு தோட்ட உரிமையாளர்களுக்கான ஆற்றல் அபிவிருத்தியில் நிறுவன பாதீட்டில் இருந்து கணிசமான நிதியை ஒதுக்கும் சாத்தியமுள்ளது. 2020 ஆம் ஆண்டில் சிறு தோட்ட உரிமையாளர்களின் அறிவை முன்னேற்றுதல் மற்றும் அவர்களது வருமானத்ததை அதிகரிக்கும் நோக்கில் ரூபா 4.15 மில்லியன் நிதி ஒதுக்கீட்டுடில் நிறுவனம் 83 பயிற்சிகள் திட்டமிடப்பட்டன.
எவ்வாறயினும் கொவிட் 19 நோய் பாரவல் காரணமாக ரூபா 2.5 மில்லியன் நிதி ஒதுக்கீட்டுடில் 50 பயிற்சி திட்டமாக மாற்றியமைக்கப்பட்டது

எவ்வாறயினும் பல்வேறு தடைகளுக்கு முகங்கொடுத்திருந்தாலும் 2020 ஆன்டில் சிறு தோட்ட உரிமையாளர்களுக்காக 14 பயிற்சிகளை நிறுவனம் நடத்தியது. அதற்கு ரூபா 0.52 மில்லியன் செலவு ஏற்ப்பட்டது. சிறு தோட்ட உரிமையாளர்களுக்காக பின்வரும் பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

- மதுசார தடுப்பு
- மனப்பாங்கு அபிவிருத்தி
- முகாமைத்துவ அபிவிருத்தி
- முயற்சியானர் அபிவிருத்தி
- தொழில்நுட்ப திறன் அபிவிருத்தி



சிறு தோட்ட உரிமையாளர்களுக்கான இயலளவை கட்டியெழுப்பும் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டதன் விபரங்கள் பின்வரும் அட்டவணை இல.05 தரப்பட்டுள்ளது.

சிறு தோட்ட உரிமையாளர்களுக்கான இயலளவை கட்டியெழுப்பும் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டதன் விபரங்கள்

பயிற்சி வகை	எதிர் பார்க்கப்பட்ட பயிற்சி	எதிர் பார்க்கப்பட்ட பங்கேற்பாளர்கள்	மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் (ரூபா.மில்)	பயிற்சிகளின் எண்ணிக்கை	பங்கேற்றோர் எண்ணிக்கை	கிரயம் (ரூபா.மில்)
இறப்பர் - சிறு தோட்ட உரிமையாளர்கள	15	750	0.75	3	98	0.12
தேயிலை - சிறு தோட்ட உரிமையாளர்கள்	15	750	0.75	6	331	0.20
தெங்கு - சிறு தோட்ட உரிமையாளர்கள்	12	600	0.6	3	170	0.12
ஏனைய பயிர்கள்	8	400	0.4	2	94	0.08
மொத்தம்-அடையப்பட்டது	-	-	-	**14**	**693**	**0.52**
மொத்தம்-திட்டமிடப்பட்டது	**50**	**2இ500**	**2.5**	-	-	-
முன்னேற்றம்	-	-	-	**24மூ**	**28மூ**	**20மூ**

அட்டவணை இல 05

2020 ஆம் ஆண்டு நிறுவனம் 50 பயிற்சிநெறிகளை நடாத்த திட்டமிட்டிருந்தது அதில் 14 பயிற்சிநெறிகளை மாத்திரமே நடாத்தப்பட்டது 24 % செயற்றப்பாட்டு முன்னேற்றமும் 20 % நிதி முன்னேற்றமும் அடையப்பட்ட்மை காட்டப்படுகிறது.

கடந்த வருடத்துடன் ஒப்பீடாக பயிற்சிகளின் முன்னேற்றம்

2019 ஆண்டுடன் ஒப்பீட்டு பார்க்கும் போது, பயிற்சிநெறிகளின் எண்ணிக்கை, பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை மற்றும் வருமானம் முன்னேற்றம் ஆகியன கணிசமாக குறைவடைந்துள்ளதனை அவதானிக்க பட்டுள்ளது. இவ்வாறு குறைவடைந்தமைக்கான பிரதான காரணம் நாட்டில் காணப்பட்ட கொவிட் 19 நோய்பரவல் நிலைமையாகும். இது நிறுவனத்தின் வெளிக்கள பயிற்சி மற்றும் செயல்பாட்டு பயிற்சி ஆகியவற்றை பெரிதும் பாதித்திருந்தது.

பயிற்சிகளின் எண்ணிக்கையில் 66 % குறைவும் வருமானம் ஈட்டிய பயிற்சிகளில் பங்கேற்றவர்களின் எண்ணிக்கையில் 62 % குறைவும் பதிவாகியுள்ளது. பயிற்சிதிட்டங்களின் வருமானம் 86 % குறைந்துள்ளது. 2019 ஆண்டில் நிறுவனத்தின் முக்கிய வருமானம் 13 ஆண்டு உத்தரவாத கல்வித் திட்டமாகும். எவ்வாறாயினும் 2020 ஆம் ஆண்டில் கொவிட் 19 நோய்ப்பரவல் நிரைமை காரணமாக குறிப்பிட்ட திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட வருமானம் உருவாக்கப்படவில்லை

சிறுதொழில் தறை பயிற்சித்திட்டங்களின் எண்ணிக்கை மற்றும் பங்கேற்ப்பாளர்களின் எண்ணிக்கை முறையே 89% மற்றும் 87% குறைந்துள்ளது. கடந்த ஆண்டுகளுடன் ஒப்பீடுகையில் சிறு உரிமையாளர்களின் திட்டங்களுக்கான நிதிப் பயன்பாடும் 88% குறைந்துள்ளது.

2019 ஆம் ஆண்டுடன் ஒப்பீடான 2020 ஆம் ஆண்டின் முன்னேற்றம்

	2019	2020	விகிதம் அதிகரிப்பு / (குறைவு)
பயிற்சிகளின் எண்ணிக்கை (வருமானம் ஈட்டிய பயிற்சிகள்)	41	17	-41%
பங்கேற்றோர் எண்ணிக்கை (வருமானம் ஈட்டிய பயிற்சிகள்)	1015	449	-55%
பயிற்சி வருமானம் (ரூபா.மில்)	69.29	23.73	-65%
சிறு தோட்ட உரிமையாளர்களுக்கான நிகழ்ச்சி திட்டத்திளின் எண்ணிக்கை	106	14	-86%
பயிற்றப்பட்ட சிறு தோட்ட உரிமையாளர்கள் எண்ணிக்கை	5414	693	-87%
சிறு தோட்ட உரிமையாளர் பயிற்சியால் ஏற்பட்ட கிரயம் (ரூபா.மில்)	3.64	0.52	-85%

அட்டவணை இல. 06





பாடசாலையிலிருந்து விலகியோருக்கான தொழில் தராதர (ஏஞ) மட்ட ஆற்றல் அபிவிருத்தி பயிற்சிகள்.

பின்வரும் தேவையை பூர்த்தி செய்வதற்காக கல்வி அமைச்சினால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள 13 ஆண்டு உத்தரவாத கல்வி திட்டத்தில் இணைக்கப்பட்ட மாணவர்களுடன் சேர்த்து NVQ 4 ஆம் மட்டம் கற்கைநெறிகளை வெற்றிகரமாக நிறுவனம் நடத்தியது.

- க.பொ.த சாதாரண தரத்தில் உயர் கல்விசார் செயல்திறன் அடையாத பிள்ளைகள் உள்ளடங்கலாக க.பொ.த சாதாரண தரத்திற்கு பின்னரான தொழிற்கற்கை பிரிவில் அனைத்து பிள்ளைகளுக்கும் சந்தர்ப்பம் வழங்குதல்.
- க.பொ.த சாதாரண தரத்திற்கு பின்னர் அனைத்து பிள்ளைகளின் தேவைக்காக நெகிழ்வாக கற்றல் சந்தர்ப்பம் வழங்குதல். மற்றும் க்றல் செயல்மறையின் உயர்வில் பங்கேற்க மற்றும் வேலை உலகில் இணைய பங்கேற்பவர்களுக்கு வழியமைத்தல்.



- தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் மிக தேவைப்படும் வேலை வாய்புகளுக்கான தொழில் பாடங்களை அறிமுகப்படுத்தல்.

NIPM பெருந்தோட்ட துறையின் தேவையை பூர்த்தி செய்வதற்கு NVQ கட்டமைப்பின் அடிப்படையை பின்பற்றி இரண்டு NVQ 4 ஆம் மட்ட கற்கைநெறிகளை நடத்தியது. அவை கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

உதவி தொழிற்சாலை அலுவலர்

- தேயிலை உற்பத்தி தொழில்நுட்ப்ப மற்றும் முகாமைத்துவ அம்சங்கள் குறித்த பயிற்சி வாய்ப்புகளை வழங்குவதல்.
- தொழிற்சாலை மற்றும் அலுவலக செயற்ப்பாடுகள் தொடர்பான அறிவு மற்றும் புரிந்தலை விருத்தி செய்வதற்கு அதிகளவு தொழில்நுட்ப ரீதியாக அன்றி வினைத்திறன் மற்றும் விளைதிறனை முன்னேற்றுதல் மற்றும் தொழிற்சாலை மட்டத்தில் தீர்மானம் எடுத்தல் மற்றும் செயற்திறன் கண்காணிப்பிற்காக இத் தகவல் பயன்படுத்தப்படுகின்றது.
- தேயிலை தெழிற்சாலை அலுவலர் பயிலுனர்களாக மிகவும் பொருத்தமான விண்ணப்பதாரிகளை இனங்கண்டு தேர்ந்தெடுப்பதில் தனியார் தேயிலை தெழிற்சாலைகள் மற்றும் பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு உதவுதல்.

வெளிக்கள அலுவலர்

- தோட்ட முகாமைத்துவம் மற்றும் விவசாய நடைமுறைகளை அறிமுகப்படுத்துதல். NVQ 4 ஆம் மட்டத்துடன் திறன்மிக்க வெளிக்கள அலுவலர்களை உருவாக்க பெருந்தோட்ட விவசாயம் தொடர்பான தர்க்கரிதியான, தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவ அம்சங்களில் பயிற்சியளித்தல்.
- கள அலுவலர்களாக மிகவும் பொருத்தமான இளம் விண்னப்பதாரிகளை இனங்கண்டு தேர்ந்தெடுப்பதில் தோட்ட மற்றும் பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு உதவுவதல்.

தேயிலை தோட்ட வெளிக்கள அலுவலர்கள் மற்றும் தேயிலை தொழிற்சாலை அலுவலர்கள் கற்கைநெறிகளை வெற்றிகரமாக நிறைவுசெய்ய நிறுவனம் இயலுமை கொண்டிருந்தது. இந்த பயிற்சிகளை பூர்த்தி செய்த மாணவர்கள் தொழில் வாய்ப்புகளை தேடிக்கொள்ள கூடியதாக இருந்தது.

ஏனைய நிறுவனங்களுக்காக பரீட்சைகளை நடத்தல்

பெருந்தோட்ட முகாமைத்துவத்துடன் தொடர்புடைய வெவ்வேறு பாடங்களில் உசாத்துணை சேவை வழங்குதல் தேசிய பெருந்தோட்ட முகாமைத்தவ நிறுவனத்தின் நோக்கங்களில் ஒன்றாகும். 1987 ஆம் ஆண்டில் இருந்து பெருந்தோட்ட துறையில் சிறப்பு தேர்ச்சியடைந்துள்ள வேறுபட்ட அரச / தனியார் துறை நிறுவனங்கள் தமது ஊழியர்களை பதவி உயர்த்தல் மற்றும் புதிய ஊழியர்களை இணைத்து கொள்ளவதற்கான பரீட்சை நடத்துதல் போன்ற சேவைகள் நிறுவனத்தால் வழங்கப்படுகிறன்றன.

கடந்த ஆண்டு அனுபவங்களுக்கு அமைய 2020 ஆம் ஆண்டில் 10 பரீட்சைகளை நிறுவனம் நடத்தியது. அதன் மூலம் ரூபா 0.94 மில்லியன் வருமானத்தை உழைத்தது. இவ்வாறான பரீட்சைகளின் விபரம் பின்வரும் அட்டவணை இல. 07 காட்டப்படுகிறது.

2019 இல் நடத்திய பரீட்சைகள்

அமைப்பு	பரீட்சைகளின் எண்ணிக்கை	பரீட்சாத்திகளின் எண்ணிக்கை	ஈட்டிய வருமானம் (ரூபா.மில்)
தெங்கு அபிவிருத்தி அதிகாரசபைக்கான வினைத்திறமைகாண் தடைதாண்டல் பரீட்சை	1	44	0.210
தெங்கு ஆராச்சி நிறுவனத்திற்க்கான வினைத்திறமைகாண் தடைதாண்டல் பரீட்சை	1	22	0.130
Asst.SD/SD எல்கடுவ பெருந்தோட்டங்களின் திறனை மேம்படுத்துவதற்கான எழுத்துபரீட்சை	1	11	0.014
இலங்கை தேயிலை சபைக்கான வினைத்திறமைகாண் தடைதாண்டல் பரீட்சை	1	11	0.026
இலங்கை தேயிலை சபைக்கான வினைத்திறமைகாண் தடைதாண்டல் பரீட்சை	1	2	0.017
இலங்கை தேயிலை சபைக்கான வினைத்திறமைகாண் தடைதாண்டல் பரீட்சை	1	3	0.024
தெங்கு அபிவிருத்தி அதிகாரசபைக்கான வினைத்திறமைகாண் தடைதாண்டல் பரீட்சை	1	23	0.158
தேசிய கால்நடை அபிவிருத்திக்கான வினைத்திறமைகாண் தடைதாண்டல் பரீட்சை	1	131	0.313
இலங்கை தேயிலை சபைக்கான வினைத்திறமைகாண் தடைதாண்டல் பரீட்சை	1	1	0.021
இலங்கை தேயிலை சபைக்கான வினைத்திறமைகாண் தடைதாண்டல் பரீட்சை	1	8	0.025
மொத்தம்	**10**	**256**	**0.941**

அட்டவணை இல . 07

பெருந்தோட்ட முகாமைத்துவ விஞ்ஞானமாணி (டீளுஉ.) பட்டம்.



இந்த பட்டப்படிப்பு 2006 ஆண்டு இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் விவசாய மற்றும் தோட்ட முகாமைத்துவ பீடத்துடன் இணைந்து தேசிய தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தினால் வழங்கப்பட்டது.

இது சிரேஸ்ட மற்றும் நடுத்தர மட்ட முகாமையாளர்கள், நிர்வாகிகள், பெருந்தோட்டம் மற்றும் தொடர்புடைய துறைகளில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை இலக்காக கொண்டு. பிரத்தியோகமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. நிறுவனத்தால் நடத்தப்படும் டிப்ளோமா படிப்புகளை உரிய அனுபவத்துடன் முடித்த மாணவர்கள் இந்த பட்டப்படிப்புக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள். அது அந்தந்த நிறுவனங்களில் பயனுள்ள மற்றும் வினைத்திறனான முகாமையாளர்களாக இருக்க உயர்தர அறிவு, விரிவான தொழில்முறை மற்றும் கல்விசார் பயிற்சியைகளை வழங்கும்.

மாணவர்களுக்குப் பயிற்றுவிப்பதில் ஆங்கிலத்திலுள்ள வழிமுறைகள் மற்றும் தொலைதூர கல்வி முறை பயன்படுத்தப்படுகின்றது. கற்றல் பொருட்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட குறிப்புக்களை பயன்படுத்தி மாணவர்கள் சுய ஆய்வுகளைச் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. மாணவர்களின் பிரச்சினைகளைப் பற்றி விவாதிக்க வழக்கமான தொடர் வகுப்புக்கள் நடத்தப்படும்.

இத்திட்டமானது ஆறு மாத செமஸ்டார்களை கொண்ட மூன்று வருட காலப்பகுதியாகும், மற்றும் பல்வேறு நிறுனங்களில் பணிபுரியும் மூத்த கல்விசார் பணியாளர்கள் மற்றும் ஆராச்சியாளர்களை கொண்ட குழு உள்ளது. இந்த பட்டப்படிப்பின் உத்தேசிக்கப்பட்ட முடிவுகள் பின்வருமாறு.

பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் தொழில்நுட்டப மற்றும் முகாமைத்துவ திறன்களை மேம்படுத்துவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் பெருந்தோட்ட துறையின் முகாமைத்துவ நிறைவேற்று மற்றும் தொழில்நுட்ப மட்ட ஊழியர்களுக்கு வாய்ப்பு வழங்குதல்

- தத்துவங்கள் மற்றும் நடைமுறை அறிவை வழங்குதல்,
- நடைமுறை வகுப்புகளை ஏற்பாடு செய்தல் ஆய்வுகூட நுட்ப்பங்கள் மற்றும் கருவிகளைக் கையாள்வதற்கு வழிகாட்டல்
- தொடர்புடைய ஆய்வுப் பகுதிகளின் நடைமுறைப் பயன்பாடுகளின் அறிவைப் பெறுவதற்கு தொடர்புடைய நிறுவனங்களுக்கு வருகையை ஏற்பாடு செய்தல்.

உயர்தர பெருந்தோட்ட மற்றும் தோட்ட தொழில்நுட்ப்ப முகாமைத்துவ அம்சங்களை உயர் அறிவியல்பிண்ணணியில் வழங்குதல்

தொழில்நுட்பம், சூழல்ப்பரப்பு, தோட்ட பயிர்களுக்கான சந்தையின் போக்கு, நுகர்வோர் நடத்தை தொடரபான உலகளாவிய மாற்றங்களை அடையாளம் காண தோட்ட முகாமையாளர் மற்றும் நிர்வாகிகளுக்கும் உதவுதல்.

ஓவ்வொரு ஆண்டும் பதிவுசெய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் பயிற்சிகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்தர்களின் எண்ணிக்கை விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

பதிவுசெய்யப்பட்ட மற்றும் சித்தியடைந்த மாணவர்களின் விபரம்

தொ/இல	தொகுதி ஆண்டு	பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை	தேர்ச்சி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை
1.	2006	21	16
2.	2007	17	11
3.	2008	35	21
4.	2009	34	16
5.	2010	47	29
6.	2011	32	17
7.	2012	54	37
8.	2013	81	-
9.	2014	91	52
10.	2015	105	17
11.	2016	121	70
12.	2017	117	48
13.	2018	143	55
14.	2019	180	73
15.	2020	275	இன்னும் பூர்த்திசெயய் வேண்டும்

அட்டவனை இல *08*

நிறுவனத்தின் தொழில்வாண்மை அங்கத்துவம்



1987 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வரையறை மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் பெருந்தோட்ட நிறைவேற்று அலுவலர்களுக்கு நிறுவனத்தின் தொழில்வாண்மை அங்கத்துவத்தை வழங்குவதலை தொடர்ந்தது. மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் (06) நிறைவேற்று அலுவலர்களுக்கு (09) நட்பு அங்கத்துவம் வழங்கப்பட்டது.

ஆண்டின் இறுதியில், ஒவ்வொரு பிரிவிலும் இருந்த மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை கிழே பட்டியலிடப்பட்டுள்ளது.

கௌரவ அங்கத்துவம்	22
நட்பு அங்கத்துவம்	227
இணை அங்கத்துவம்	29
மாணவ அங்கத்துவம்	01
மொத்தம்	281

அட்டவணை இல 09

2020 ஆம் ஆண்டில் இலங்கையில் நிலையான பெருந்தோட்ட முகாமைத்துவத்திற்கான ஒருங்கிணைந்த அணுகுமுறைகள்: முன்னோக்கிச் செல்லும் வழியை மறுசீரமைத்தல் மற்றும் உறுப்பினர்களிடையே தகவல்களை பகிர்ந்து கொள்ளவதை நோக்கமாக கொண்ட ஒரு விழிப்புனர்வு செயலமர்வினை ஏற்பாடுசெய்து நடத்துவதற்கு நிறுவனம் திட்டமிட்டுள்ளது.
நாட்டில் நிலவும் கோவிட் 19 நிலைமையயை கருத்தில் கொண்டு இது 2021 ஆண்டுக்கு மாற்றப்பட்டு தொழில்சார் உறுப்பினர்களின் பங்கேற்புடன் பெப்ரவரி 2021 இல் ஹோட்டல் குயின்ஸ்பரியில் நடைபெற்றது.

கிடைக்கத்தக்க வசதிகள்

- **நூலக வசதிகள்**

தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் நூலகத்தில் 4200 மேற்ப்பட்ட தகவல் மூலாதாரங்கள் உள்ளன அவை புத்தகங்கள், இதழ்கழ் மற்றும் பருவ இதழ்கள், சுவரெட்டிகள் துண்டு பிரசுரங்கள், கட்டுரைகள், இறுவெட்டுக்கள், (CDs, DVDs) என வகைப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் அந்த மூலாதாரங்கள் இரண்டுவகையாக உருவாக்கப்படுகின்றன. இரவல் வழங்கல் சேகரிப்பு மற்றும் உசாத்துணை சேகரிப்பு. மேலே உள்ள அனைத்து தகவல் ஆதாரங்களும் DDC அமைவாக வகைப்படுத்தப்பட்டுள்ளது



தேயிலை, இறப்பர், தெங்கு, கரும்பு, மரமுந்திரிகை, விவசாயம் போன்ற பெருந்தோட்ட கைத்தொழில்களுடன் தொடர்பான பெறுமதிமிக்க புத்தகங்களை தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுனத்தின் நூலகம் கொண்டுள்ளது.

மேலும் இது கணக்கீடு, பொது முகாமைத்துவம், மனிதவள முகாமைத்துவம், சந்தைப்படுதல், உயிரியல், வேதியல் கணிதம்,கணனி அறிவியல் ஆங்கிலமொழி பொது அறிவு மற்றும் பொழுது போக்கு தொடர்பான புத்தக தொகுப்பை கொண்டுள்ளது. மேலும் நூலகம் இரவல் வழங்கல் மற்றும் உசாத்துணை மற்றும் நீடிப்பு சேவை வழங்குகின்றது. இறுதியாக NIPM இன் நூலகத்தை தன்னியக்க நுலகமாக மாற்றுவதன் மூலம் ஆராச்சி நூலகமாக மற்றியமைப்பதற்கான மதிப்பீட்டின் முதல் படியாக வைத்துள்ளது. இது 2021 ஆம் ஆண்டிற்குள் நிறைவுசெய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

கற்றல் நிலையம்

அனைத்து தேயிலை உற்பத்தி நடவடிக்கைகளையும் நன்கு அறிந்துகொள்வதற்காக தற்போதுள்ள டிப்ளோமா திட்டம் மற்றும் வருங்கால பயிர்செய்கையாளர்களின் நடைமுறைதேவைகளை பூர்த்திசெய்வதற்கு இந்த நிறுவனம் ஒரு கற்றல் நிலையத்தை கொண்டுள்ளது. இந்த நிலையத்தில் நவீன தேயிலை உற்ப்பத்தி இயந்திரங்கள் மற்றும் ஒரு சிறந்த தேநீர் சுவைபர்க்கும் அறை உள்ளது. இங்கு ஒரு தடவையில் 20 மாணவர்களை உள்வாங்கலாம்.





- **தங்குமிட வசதிகள்**

.

கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்துக்கு தேவையான போதுமான உட்கட்டமைப்பு வசதிகளை இந்த நிறுவனம் கொண்டுள்ளது. உள்நாட்டு மற்றும் சர்வதேச கேள்விகளுக்கேற்ப சந்தை போக்கை பேணுவதற்காக மேம்படுத்தல் மற்றும் நவீனமயப்படுத்தலுக்காக ஒவ்வொரு ஆண்டும் தேசிய பாதீட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அத்துருகிரிய நிலையம் மூன்று விரிவுரை மண்டபங்கள் மற்றும் குளிருட்டும் வசதிகளுடன் கூடிய மாநாட்டு மண்டப வசதிகளை கொண்டுள்ளது. மாநாட்டு மண்டபத்தில் ஒரேநேரத்தில் 200 பேர் அமரலாம். 60 பேருக்கு விடுதி வசதிகளை வழங்கலாம்.

அத்தருகிரிய விடுதி





போகவந்தலாவ பிரந்திய நிலையம்

போகவந்தலாவ தெரேசியா தோட்டத்தில் அமைந்துள்ள NIPM இன் பிராந்திய நிலையமாகும். இது நவீன வசதிகளுடனான பயிற்சி நிலையமாக மாற்றப்படும் வரை அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். கிட்டத்தட்ட 100 பேருக்கான இயலளவை கொண்ட மாநாட்டு மண்டபம், ஒவ்வொன்றிலும் 50 பேர் அமரக்கூடிய இரண்டு விரிவுரை மண்டபங்கள் நிலையத்தில் உள்ளன



போகவந்தலாவ விடுதி ஒரே நேரத்தில் 70 பேருக்கு தங்குமிட வசதிகளை வழங்குகிறது. இது பெரிய உணவு மண்டபம், 3 அலுவலக அறைகள் மற்றும் 600 இக்கு மேற்பட்ட புத்தகங்களை கொண்ட சிறிய நூலகத்தையும் கொண்டுள்ளது. அங்கே விடுதி முகாமையாளர் பங்களாவும் உள்ளது. இந்த நிலையத்தில் விடுதி முகாமையாளர் மற்றும் சிற்றூழியரை தவிர வேறு எவரும் நிரந்தர தொழிலாளர்களாக இல்லை. எனவே பயிற்சிகளின் போது தேவையான தொழிலாளர்கள் பணிப்பாளரின் முன் அனுமதியுடன் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படுகின்றனர். அமைய அடிப்படையிலான மூன்று தொழிலாளர்களும் ஒரு பாதுகாவலரும் உள்ளனர்.


தெனியாய பிரந்திய நிலையம்

தென் மாகாணத்திற்கான பயிற்சித்திட்டங்கள், வசதிகளை வழங்குவதற்காக 2018 இல் தியதாவியில் நிறுவப்பட்டது. ஒரே நேரத்தில் 40 மாணவர்களை உள்ளடக்ககூடியது.

வசதிகளை வாடகைக்கு வழங்குதல்

விடுதி விரிவுரை மண்டபம் உணவு போண்ற வசதிகளை வாடகைக்கு வழங்குவதன் மூலம் கிடைக்கும் வருமானம் பின்வரும் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.

கொவிட் தொற்று நோய்பரவல் காரணமாக பல நிறுவனங்கள் நிகழ்ச்சிகளை நடத்தாததால் 2020 ஆம் ஆண்டில் வெளி நிறுவனங்களுக்கான வசதிகளை வாடகைக்கு வழங்குவதன் மூலம் கிடைக்கும் வருமானம் மிக குறைவடைந்துள்ளது



.

எங்கள் செயற்பாடுகள்



NIPM பணிப்பாளர், பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் பணியாளர்கள் 2020 ஆம் ஆண்டுக்கான தமது பணிகளை தேசிய கொடி முன்றலில் அரச சேவை உறுதி மொழியுடன் ஆரம்பித்தனர்.

தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம் 72 வது தேசிய சுதந்திர தினத்தை 2020 பெப்ரவரி 04 தினத்தன்று கொண்டாடியது. சுதந்திர தின கொண்டாட்டத்திற்கு பின்னர் நிறுவனம் அதன் 4 வது NIPM சவால் துடுப்பாட்ட தொடரை ஏற்பாடுசெய்திருந்தது. அத்துருகிரிய ஸ்ரீல் கூட்டுதாபன விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இன் நிகழ்வில் NIPM இன் அணைத்து பணியாளர்கள், மாணவர்கள் மற்றும் பழைய மாணவர் சங்கத்தின் அங்கத்தவர்களும் பங்குகொண்டனர்.





வெளிவிவகார இராஜாங்க அமைச்சின் முன்னாள் செயலாளர் திரு ஏ.எல்.ஏ. அசோக்க ஸ்ரீவர்தன தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவன தவிசாளராக நியமிக்கப்பட்டுள்ளர்.

கம்பனி தோட்ட மறுசீரமைப்பு தேயிலை தோட்டம் தொடர்பான பயிர்கள் தேயிலை தொழிற்சாலை நவீனமயமாக்கல் மற்றும் தேயிலை ஏற்றுமதி ஊக்குவிப்பு இராஜங்க அமைச்சர் கௌரவ கணக ஹேரத் அவர்களின் பங்கேற்புடன் NIPM கற்றல் நிலையம் 24 செப்ரம்பர் 2020 அன்று பெருந்தோட்ட அமைச்சர் மாண்புமிகு ரமேஸ் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.



நிதி மீளாய்வு

செயற்திறன்

2019 ஆம் ஆண்டுடன் ஒப்பீடும் போது 2020 ஆம் ஆண்டில் நிதிச் செயல்பாட்டின் சுருக்கத்தை. பின்வரும் அட்டவனை எண் 10, ஒப்பிட்டு காட்டுகின்றது.

	2020 (ரூபா மில்.)	2019 (ரூபா மில்.)	வேறுபாடு (ரூபா மில்.)	முன்னேற்றம் (%)
மொத்த வருமானம்	210.34	244.62	-34.28	-14.0%
அரச மானியம்				
மீண்டெழும் மானியம்	57.81	54.00	4.81	8.9%
மானிய மூலதனம்	25.75	21.00	4.75	22.6%
விசேட அபிவிருத்தி திட்ட மானியம்	80.81	60.78	20.03	32.9%
பயிற்சி வருமானம்	23.74	69.29	-45.54	-65.7%
ஏணைய வருமானம்	22.21	39.55	-17.34	-43.8%
மொத்த செலவீனம்	113.52	138.82	-25.29	-18.2%
சும்பளம், கூலி மற்றும் ஊழியர் நன்மைகள்	45.13	43.42	1.72	3.9%
பயிற்சி மற்றும் கல்விசார் ஏணைய செலவீனம்	11.34	32.39	-21.04	-64.9%
	57.03	63.01	-5.97	-9.4%
தேறிய மிகை	96.81	105.89	-9.07	-8.5%

அட்டவணை இல 10

2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2020 ஆம் ஆண்டில் திறைசேரியிலிருந்து மீண்டெழும், மூலதனம் மற்றும் சிறப்பு அபிவிருத்தத் திட்டத்திற்கான மானியங்களை பெறுவதில் நிறுவனம் கணிசமான முன்னேற்றத்தை காட்டியுள்ளது. 2020 ஆம் ஆண்டு தேறிய மிகையாக பதிவாக திறைசேரி மானியம் குறிப்பிடதக்க காரணியாகும்.

2020 ஆம் ஆண்டில் பயிற்சித்திட்டங்கள் மூலம் ஈட்டிய வருமானம் ரூபா 45.54 மில்லியன். 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில்,65.7% முன்னேற்றம் பதிவாகியுள்ளது. 2020 ஆண்டில் கொவிட் தொற்றுநோய் காரணமாக இந்த சாதகமற்ற நிலமையால் திட்டமிடப்பட்ட நிகழ்ச்சிகள் ரத்து செய்யப்பட்டு ஒத்திவைக்கப்பட்டது.

2020 ஆம் ஆண்டின் நிதி அறிக்கைகளின் படி மொத்த செலவீனம் ரூபா 25.9 மில்லியனால் குறைவடைந்துள்ளது., பயிற்சி மற்றும் ஏனைய செலவுகள் முறையே குறைவடைந்தமையால் 18% எதிர்மறை முன்னேற்றம் பதிவாகியுள்ளது.

கடந்த ஆண்டுடன் ஒப்பீடும் போது 2020 ஆம் ஆண்டில் சம்பளம், ஊதியம் மற்றும் பணியாளர் நலன்கள் 3.9% அதிகரிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறயினும் பயிற்சி செலவு 21.04 மில்லியனால் குறைந்துள்ளது. பயிற்சி வருமானம் குறையும் வீதத்துடன் தொடர்புடைய 64.9% எதிர்மைறான முன்னேற்றம் பதிவாகியுள்ளது.

தேய்மானத்தின் பெறுமதி உட்பட ஏனைய செலவீனங்கள் ரூபா 5.97 மில்லியனாக குறைந்துள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது இது 9.4% குறைவு ஆகும.

2020 ஆம் ஆண்டில் ரூபா 96.81 மில்லியன் தேறிய மிகை பதிவாகியுள்ளது. இது கடந்த ஆண்டுடன் ஒப்பீடம் போது 8.5.% தேறிய மிகை குறைவடைந்துள்ளது.

கொவிட் 19 காரணமாக முழு உலகமும் மூடப்பட்டதன் விளைவாக நாட்டின் பொருளாதாரத்திலும் இந்த சரிவைக் காணக்சுடியதாக இருந்த போதிலும் நிறுவனத்தின் முகாமையினால் கணிசமான முன்னேற்றத்தை தக்கவைத்துகொள்ள முடிந்தது.

2019 ஆண்டுடன் ஒப்பீடும் போது 2020 ஆம் ஆண்டின் நிதி நிலமை முன்னேறம்

கிழ் உள்ள அட்வணையில் 2019 ஆண்டுடன் ஒப்பீடும் போது 2020 ஆம் ஆண்டின் நிதி நிலமை முன்னேற மாற்றம் காட்டப்படுகின்றது.


	2020	2019	வேறுபாடு	முன்னேற்றம்
மொத்த சொத்து	978.14	873.56	104.58	11.9%
நடைமுறைச் சொத்து	272.01	247.13	24.88	10.0%
நடைமுறைப் பெறுப்பு	28.11	21.36	6.75	31.6%
நடைமுறை விகிதம்	9.67	11.56	-1.89	-16.3%
தேறிய சொத்து	940.68	843.91	96.77	11.46%

அட்டவணை இல 11

2020 ஆம் ஆண்டின் இறுதியில் காசும் காசுக்குசமனானவையின் பெறுமதி அதிகரித்ததன் விளைவாக நடைமுறை சொத்தின் அதிகரிப்பு 10 % என பதிவாகியுள்ளது. பிரதான அபிவிருத்தி திட்டத்தின் முலம் கொடுக்குமதி 31.6 % ஆல் அதிகரித்துள்ளது. அதன்காரணமாக 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிட்டுபார்க்கும் போது நடைமுறை விகிதம் 16.3 % ஆல் குறைவடைந்துள்ளது. எவ்வாறாயினும் தற்போதய நடைமுறை விகிதம் 16.3% காணப்படுதால் சிறந்த நிதி நிலைமையை காட்டுகின்றது.

தேறிய சொத்து

2020 ஆம் ஆண்டில் மொத்த தேறிய சொத்துகள் ரூபா 940.68 மில்லியன் வரை அதிகரித்துள்ளது. இதன் விளைவாக ரூபா 96.87 மில்லியன் மிகை ஈட்டியது. இது 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 11.4% அதிகரித்துள்ளது. விரிவரை மண்டபங்கள் மற்றும் R&D அலகுடன் கூடிய புதிய கட்டிடத்தை நிர்மானிப்பதற்கான முதலீடு இந்த அதிகரிப்பிற்கு காரணமாகும். பட்டம் வழங்கும் நிறுவனத்திறகு இணையாகும் வரை அபிவிருத்தி செய்வதற்கு விரிவரை மண்டபங்கள் மற்றும் ஆராச்சி அபிவிருத்தி அலகு உள்ளடங்கலாக இந்த புதிய கட்டிடத்தை நிர்மானிப்பதற்கு அரசு ரூபா 80.81 மில்லியன் தொகையினை வழங்கியுள்ளது. மேலும் 2020 ஆம் ஆண்டிற்கான மூலதனச் செலவினங்களுக்குகாக 25.75 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது. 2014 முதல் 2020 வரையிலான தேறிய சொத்துக்களின் அதிகாரிக்கும் போக்கைக் பின்வரும் வரையடம் இல 03 காட்டுகின்றது.



திரவ நிலை

2020 ஆம் ஆண்டின் இறுதியில் ஒவ்வொரு நடைமுறை பொறுப்புக்குமாக 9.67 மடங்கு நடைமுறை விகிதம் இருந்தது இது நிருவனத்தினால் ஆரேக்கியமான நிதி ஸ்திரத்தன்மை பேணப்படுவதனை குறிக்கின்றது.

<u>ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களில் மூதலீடு</u>

2020 ஆம் ஆண்டில் நிறுவனம் ரூபா 41.99 மில்லியன் அசையும் சொத்து மற்றும் ரூபா 0.24 அசையா சொத்தினையும் கையகப்படுத்தியது. இதன் மூலம் 2020 ஆம் ஆண்டின் இறுதியில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் தேறிய பெறுமதி ரூபா. 502.49 மில்லியன் என பதிவுசெய்யப்பட்டது. நிறுவனம் பழைய கட்டிடத்தை கற்றல்மையமாக மாற்றியது. 2020 ஆண்டுகாலத்தில்இதில் தேயிலை பரிசோதனை கூடம் உட்பட கட்டிடத்தை புனரமைக்க ரூபா 12.46 மில்லியன் முதலீடு மற்றும் ரூபா 14.00 சிறிய வகை தேயிலை பதப்படுத்தும் இயந்திரங்களை நிறுவுவதற்கும் பயன்படுத்தியது.









கற்றல் நிலையம் மற்றும் தேனீர் சுவைபார்க்கும் நிலையம்

நிறுவனம் ரூபா 4.00 மில்லியன் பெறுமதியில் தளபாடம் மற்றும் பெருத்துகளை கொள்வனவு செய்தது அத்துடன் நூலக புத்தகங்களின் எண்ணிக்கையை ரூபா 2.02 மில்லியனால் அதிகரித்தது. மேற்குறிப்பிட்டதற்கு மேலாக நிறுவனம் தனது பயிற்சி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி எதிர்காலத்தில் பட்டம் வழங்கும் நிலையை நோக்கி நிறுவனத்தை மேம்படுத்தியுள்ளது. திட்டத்தின் முதல் க்ட்டம் 2020 ஆம் ஆண்டில் நிறைவுசெய்யப்பட்டதுடன் 2017 இல் இருந்து 2020 வரை வழங்கப்பட்ட மொத்த நிதியுதவி ரூபா 216.9 மில்லியன ஆகும். கட்டிடத்திற்கான முதலீடு செய்யப்பட்ட தொகை நடைமுறைவேலை பெறுமதி ரூபா 199 மில்லியனாக பதிவுசெய்யப்பட்டுள்ளது. ஏனெனில் குறைநடத கட்டத்தில உள்ளது. 2021 இல் திட்டத்தின் இரண்டம் கட்டம் நிறுவனத்தினால் உருவாக்கப்படும் நிதியைப்ப பயன்படுத்தி தொடங்கும்

2020 பாதீட்டிற்கு எதிரான மூலதனச் செலவினங்களின் சுருக்கம்

2020 ஆம் ஆண்டு நிறுவனம் மூலதன செலவினத்திற்காக ரூபா 25.75 மில்லியன் திறைசேரியிலிருந்து பெற்றது. ஆண்டுக்கான மொத்த மூலதன செலவு ரூபா 34.6 மில்லியன் ஆகும் எனவே நிறுவனம் மூலதன செலவினங்களுக்கு நிதியளிக்க உருவாக்கப்பட்ட வருமானத்திலிருந்து ரூபா 8.85 மில்லியன் தொகையை பயன்படுத்த வேண்டியிருந்தது. வரவு செலவு தொகைக்கு எதிராக ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மூலதனச் செலவினங்களின் விபரங்கள் பின்வரும் அட்டவணை இல 12 கட்டப்பட்டுள்ளது.

மூலதன பொருட்கள்	பாதீடு ரூபா.மில்.	உன்மையானது ரூபா.மில்.	முன்னேற்றம்
மூலதன சொத்து முன்னேற்றம் மற்றும் புனரமைத்தல்	12.01	8.13	67.6%
தளபாடம் மற்றும் முன்னேற்றம்	11.83	9.37	79.2%
ஆதனம் மற்றும் இயந்திரம்	12.00	12.14	101.1%
காணி மற்றும் முன்னேற்றம்	3.00	1.14	38.0%
மென்பெருள் அபிவிருத்தி	3.00	2.66	88.6
இயலளவு அபிவிருத்தி	4.75	0.72	15.1%
ஏனைய முதலீடு	0.30	0.19	63.3%
மொத்தம்	46.90	34.60	73.7%

2020 ஆம் ஆண்டில் நிறுவனம் முகங்கொடுத்த சவால்கள்

2020 ஆம் ஆண்டில் கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக நிறுவனத்தின் செற்பாடுகள் கணிசமான காலத்திற்கு மூடப்பட வேண்டியிருந்தது. கல்வி பின்னணி மற்றும் மாணவர்களின் பங்கோற்பைக் கையாள்வதன் அடிப்படையில் நிறுவனத்தின் செயல்பாடுகள் இருப்பதால் நிறுவனத்தின் அனைத்து செயல்பாடுகளும் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட வேண்டியிருந்தது. விசேடமாக களத்திலுள்ள சிறு தோட்ட உருமையாளர்களுக்கான இயலளவு அபிவிருத்தி திட்டம் போன்ற அத்தியவசிய திட்டங்களை தொடர நிறுவனம் மாற்றிடான தீர்வுகளை கண்டறிய வேண்டியிருந்தது.

2020 ஆம் ஆண்டில் தனிமைபடுத்தல் மற்றும் தொற்றுநோய் ஊரடங்கு உத்தரவு காரணமாக ஊழியர்களின் கட்டாய விடுமுறையால் நிறுவனம் மிகவும் சவாலான சூழ்நிலையை எதிர்கெண்டது. இந்த பிரச்சினையில் எங்கள் வாடிக்கையாளர் தளத்திற்கு கடுமையான பாதிப்பு ஏற்ப்பட்டது. மேலும் அலுவலகம் மற்றும் பணிநிலையங்களில் தங்க இயலாமைகாரணமாக ஊழியர்களின் பற்றக்குறையையும் அவர்கள் உணர்ந்தனர்.

மேற்கூறியவற்றை தவிர 2020 ஆம் ஆண்டில் கொவிட் 19 தொற்றுநோயால் ஏற்ப்பட்ட உலக பொருளாதார வீழ்ச்சியின் எதிர்மறை விளைவுகளால் நிறுவனம் பாதிக்கப்பட்டது.

விரிவுரை மண்டபங்கள், ஆராச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவுகளை கொண்ட புதிய கட்டிடத்தின் நிர்மான பணிகள் மேற்கூறிய சூழ்நிலைகளால் தாமதமாகிவிட்டன மேலும் புதிய கட்டிடத்தின் நிவை திகதி நீடிக்கப்பட வேண்டும் மற்றும் பட்டம் வழங்கும் அங்கிகாரம் பெறுதல் போன்ற திட்ட பணிகளைவழங்க வேண்டும் என்று கணிக்கப்பட்டுள்து. நிறுவனம் எதிர்பார்த்த காலத்திற்கு அப்பால் 2022 க்கு பிற்போடப்பட்டுள்ளது.

மேலும் நிறுவனம் தற்போதுள்ள கட்டிடத்தில் தேயிலை சுவைபார்க்கும் அலகுடன் கூடிய நவீன தேயிலை பதப்படுத்தும் தொழிற்சாலை மற்றும் NVQ மாணவர்களுக்கான புதிய கற்றல் மைய வளாகத்தை தொடங்குவதற்கு கற்றல் நிலையத்தின் இயலளவு ஒரு தடவையில் 300 கிலே தேயிலை இலைகளாக்குவதற்கும் தனது சொந்தமாக உழைத்த நிதியான ரூபா 26.0 மில்லியன் செலவு செய்துள்ளது. தெண்னை மற்றும் இறபர் போன்ற பிற விவசாய பொருட்களும் இதே போன்ற கற்றல் நிலையத்தை நிறுவ நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

முடிவுரை

கொவிட் 19 தொற்றுநோயின் பரவல் காரணமாக நிறுவனம் அதன் செயல்பாடுகளை தற்காலிகமாக இடைநிறுத்த வேண்டியிருந்தாலும் கூட, நிறுவனம் அதன் நிதி ஸ்திரத்தன்மை பராமாரிக்க முடிந்தது. எனினும் அரசாங்கம் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் இருந்த போதிலும் மீன்டெழும் மூலதனம் மற்றும் விசேட அபிவிருத்தி திட்ட மானியங்களாக ரூபா 164..37 மில்லியன் அரசாங்கம் வழங்கியுள்ளது, என்பதனை மகிழ்ச்சியுடன் இங்கு தெரிவித்து கொள்கின்றேன். 2020 ஆம2020 இன் இறுதியில் மொத்த தேறிய சொத்தின் பெறுமதி ரூபா 940.68 மிலியனாக அதிகரித்துள்ளது.

அத்துடன் முழு உலகமும் நோய் தொற்று பிரச்சினையால் பயிற்சசி வருமானம் குறைவடைந்துள்ள. எனவே நிறுவனம் அங்கிகரிக்கப்பட்ட பயிற்சித்திட்டத்தின் கோட்ப்பட்டு பகுதிகளை நிகழ்நிலை முறையிலும் அதற்கு ஏற்றவாறு பாடத்தொகுதிகளை சரியான முறையில் திருத்தியமைக்கப்பட்டது.

பாடத்தொகுதிகளின் திருத்தத்தின் மூலம் காடநெறிக்கட்டணத்தை ஓரளவிற்கு குறைக்கப்பட்து.

அறிக்கையிடல் காலத்தில் NVQ மட்டம் 04 மதல் NVQ மட்டம் 06 வரையிலான பாடநெறிகளை நிறுவனம் உருவாக்க முடியும், குறிப்பாக கல்வி பொது தராதர சாதாரண பரீட்சையை வெற்றிகரமாக முடிக்காத மாணவர்களுக்காக NVQ மட்டம் 04 திட்டங்களை உருவாக்கப்பட்டுள்ளது. இந்த 13 ஆண்டு உத்தரவாதக் கல்விதிட்டம் கல்வி அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 2021/2022 க்குள் NVQ மட்டம் 07 பெற்றவர்களுக்கு பட்டம் வழங்கும் நிறுவனமாக அபிவிருத்தி செய்யும் இலக்கை நோக்கி நிறுவனதடதால் அனைத்து வசதிகளும் உருவாக்கப்பட வேண்டும்.

ஒரு அரச நிறுவனமாக 2030 ஆம் ஆண்டிற்க்குள் அடைய வேண்டிய தரமான கல்வி மற்றும் பொருளாதார வளர்ச்சியின் இலக்குகளை அடைவதில் NIPM முக்கிய பங்கு வகிக்கிறது.

2020 ஆம் ஆண்டில் குறிக்கோள் மற்றும் இலக்குகளை அடைவதற்கு ஒத்துளைப்பு வழங்கிய அனைவருக்கும், ஆளுநர் சபை மற்றும் நிறுவன தவிசாளர் என்ற வகையில் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

2020

நிதி அறிக்கைகள்

தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்,
எம்.டி.எச். ஜயவர்தன மாவத்தை,
அத்துருகிரிய.

28 பெப்ரவரி 2021

நிதி அறிக்கை	பக்க இல.
கணக்கிட்டு கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள்	48 -57
நிதி நிலைகூற்று	58-60
நிதி செயல்திறன் அறிக்கை	61
பணப்பாச்சல் கூற்று	62-63
உரிமை / தேறிய சொத்து மாற்றல் கூற்று	64
பாதிடப்பட்ட மற்றும் உண்மையான செயல்திறன்	65
குறிப்புகள் மற்றும் அட்டவணைகள்	66-71
ஆதனம், பொறி மற்றும் உபகரண அட்டவணை	72-73
அருவச்சொத்து சொத்து அட்டவணை	74
குறிப்புகள் மற்றும் அட்டவணைகள் (தொடர்)	75-92
பிரிவு அறிக்கை	93-94
நிதி பெழிப்புக்கள்	95-96
கணக்காய்வாளர் நாயக அறிக்கை	97-104

தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்

2018 ஆம் ஆண்டுக்கான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் நிதி கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

1.0 அறிக்கையிடல் உள்ளடக்கம்

தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம் 1979 ஆம் ஆண்டின் 45 இலக்க தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ சட்டத்தின் கிழ் நிறுவப்பட்ட சட்டரீதியான சபையாகும். இது அரசாங்கத்தின் சட்டரீதியான அமைப்பாகவும், மிகவும் பயனுள்ள சாத்தியமான நிறுவனமாக மாற்றியமைக்க 1981 ஆண்டின் 76 ஆம் இலக்க சட்டத்தினுடாகவும் 1987 ஆண்டின் சட்ட இல. 05 மற்றும் 2003 ஆண்டின் சட்ட இல. 38 ஆகிய சட்டங்களால் திருத்தியமைக்கப்பட்டது.

இந்த சட்டம் மற்றும் அதன் திருத்தங்களிற்கு அமைவாக பயிற்சிகள் / கற்கைநெறிகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ் வழங்குதல் மற்றும் தகுதியான தோட்ட நிர்வாகிகளுக்கு தொழில்சார் அங்கத்துவம் வழங்கும் அதிகாரம் வழங்கப்பட்ட ஒரே ஒரு அரசாங்க அமைப்பு NIPM ஆகும்.தேயிலை, இறப்பர், கரும்பு, மரமுந்திரிகை, கறுவா மற்றும் பனை போன்ற பயிர்செய்கையில் ஈடுபட்டிருக்கும் சிறு தோட்ட துறை உட்பட பெருந்தோட்ட கைத்தொழிலில் பணிபுரிபவர்களின் உயர்தர தொழில்சார் திறனை பேணுதலை உறுதிப்படுத்துகிறது. இந்த நோக்கங்களை அடைவதற்கு, NIPM பல்வேறு பயிற்சிநெறிகள், கருத்தரங்குகள் பயிற்சி பட்டறைகள், பரீட்சைகள் போன்றவற்றை நடத்துகிறது. அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களிற்கு ஆராச்சி மற்றும் ஆலோசனை சேவைகளையும் வழங்குகின்றது. நிறுவனம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடன் இணைந்து பெருந்தோட்ட முகாமைத்துவத்துடன் தொடர்புடைய பட்ட படிப்பு கற்கைநெறிகளை நடத்துகிறது. அதுமட்டுமன்றி வெளிநாட்டு மாணவர்களுக்கான பயிற்சிகளை நடத்தும் திறனையும் கொண்டுள்ளது.

நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் எம்.டி.எச். ஜெயவர்தன மாவத்தை, அத்துருகிரியவில் அமைந்துள்ளது.

2.0 தயாரிப்பிற்கான அடிப்படை

2.1 இணக்கப்பாட்டு கூற்று

நிறுவன நிதிக்கூற்று, நிதி நிலை கூற்று, நிதி செயல்திறன் கூற்று, உரிமை மாற்றல் கூற்று, பணப்ப்பாச்சல் கூற்று, மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மையான செயற்திறன் ஆகியவற்றுடன் சேர்த்து குறிப்பிடத்தக்க கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என்பன இலங்கை அரச நிதி கணக்காளர்கள் சங்கத்தால் (APFASL) பிரகடனப்படுத்தப்பட்ட கணக்கீட்டு அட்டுறு அடிப்படையில் இலங்கை **அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கு** அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளது.

2.2 அளவீட்டின் அடிப்படை

நிதி நிலை கூற்றிலுள்ள பின்வரும் பொருட்கள் தவிர நிதி நிதி கூற்றுக்கள் வரலாற்று கிரய மாற்றல் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

- வாகனங்கள் மீள்மதிப்பீட்டு அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

- 2014 ஆம் ஆண்டிலிருந்து அரச துறை கணக்கீட்டு நியமங்களை உள்வாங்கும் பொருட்டு ஆதனம், பொறி மற்றும் உபகரணம் மீள்மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகிறது. வருடாந்த அறிக்கையிடும் காலம் மற்றும் தொடரும் ஆண்டுகளுக்கு கிரய முறை பொருத்தமானது. பொகவந்தலாவ பிராந்திய நிலையத்தின் சொத்துக்கள் மீள்மதிப்பிடப்பட்டு 2015 இல் நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டிருந்தது.

- ஓய்வூதிய நன்மை நடைமுறை மதிப்பீட்டு முறையின் அடிப்படையில் அங்கிகரிக்கப்பட்ட பொறுப்பாகும்.

- 2019 ஆண்டு காணி மீள் மீள்மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டிருந்தது.

2.3 செயற்பாட்டு மற்றும் முன்னிலைப்படுத்தும் நாணையம்

இந்த நிதி கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் (ரூபா) முன்னிலைப் படுத்தப்படுகின்றது. இது நிறுவனத்தின் செயற்பாட்டு மற்றும் முன்னிலைப்படுத்தும் நாணையமாகும்.

3.0 குறிப்பிடதக்க கணக்கீட்டு கொள்கைகளின் சுருக்கம்

நிதி கூற்றுக்கள் தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவுக்கு அமைய தயரிக்கப்படுகிறது. கணக்கீட்டு கொள்கைகள் காலம் முழுவதும் தொடர்ச்சியாக பயன்படுத்தப்படுகின்றன. அரச மானியம் மற்றும் பயிற்சிகள் மூலம் ஈட்டிய வருமானம், கற்கைநெறிகள், ஆலோசனை பணிகளை மேற்கொள்ளல், தொழில்சார் அங்கத்துவ சந்தா மற்றும் வெளியீடுகளை விற்பனை செய்தல் போன்றவற்றிலிருந்து நிதி கிடைக்கின்றன.

இவ்வாறான திரட்டப்பட்ட நிதி தேவையின் போதும், நிறுவன பொறுப்புகளை பூர்த்திசெய்ய பயன்படுத்தப்படுகிறது.

நிதி கூற்றுக்கள் தயாரிக்கும் போது பயன்படுத்தும் முதன்மை கணக்கீட்டு கொள்கைகள் கீழே தரப்பட்டுள்ளன. இந்த கொள்கைகள் வேறுவிதமாக கூறப்படும் வரை தொடர்ச்சியாக அனைத்து வருடங்களிலும் பயன்படுத்தப்பட்டுகிறது.

3.1 மறைமுக சொத்துக்கள்

மறைமுக சொத்துக்கள் தனியாக கையகப்படுத்தப்பட்டு பெறுமானதேய்வு மற்றும் பெறுமதியிழப்பு நட்ட கிரயங்கள் குறைக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளன. பெறுமான இழப்பு **நேர்கோட்டு முறையில்** பயனுள்ள ஆயுட்கால அடிப்படையில் கணிப்பிடப்பட்டுள்ளன்.

பயனுள்ள ஆயுட்கால மதிப்பீடு ஒவ்வோர் ஆண்டின் அறிக்கையிடல் காலத்திலும் வாய்ப்புக்கேற்றவாறு கட்டணங்கள் மீளாய்வு செய்யப்படுகின்றன. மதிப்பீட்டிற்கான எந்த மாற்றங்களின் விளைவுகளும் எதிர்பார்க்கப்படும் அளப்படையில் கணக்கிடப்படும

.கணனி மென்பொருள்

கணனி மென்பொருளாக உருவாக்கப்பட்டுள்ள கணக்கீடு, சம்பளப்பட்டியல், பயிற்சிநெறி புள்ளிவிபரம் ஜிஐஎஸ் மற்றும் வள முகாமைத்துவம் என்பன கணனி செயற்பாட்டு அமைப்பின் பகுதியாக இல்லாததால் இது நிறுவனத்தின் கட்புலனாக சொத்தாக அங்கிகரிக்கப்பட்டுள்ளது. இந்த சொத்துக்கள் 4 வருடத்திற்கு மேற்பட்ட கணக்குகளிலிருந்து பதிவழிக்கப்படுகின்றன.

தொலைகல்வி பாடவிதான மேம்படுத்தல் கிரயம்

பெருந்தோட்ட முகாமைத்துவ தேசிய டிப்ளோமா தொலைக்கல்வி பாடவிதான மேம்படுத்தல் கிரயம் கட்புலனாக சொத்தாக அங்கிகரிக்கப்பட்டுள்ளது. தயாரிக்கப்பட்ட பாடவிதானத்தின் (எழுதப்பட்ட) பயன்தரு ஆயுட்காலம் நான்கு வருடங்களாகும்.

என்ஐபிஎம் இன் நிலைய பாடல்

நிறுவனம் நிலைய பாடலை இசையமைப்பு மற்றும் காட்சிகளுடன் வடிவமைத்துள்ளது. இவ் இசையமைப்பிற்றகான செலவு மற்றும் இசை நிறுவனத்தின் கட்புலனாக சொத்தாக கருதப்படுகின்றது. இசையமைப்பிற்றகான செலவு பெறுமான இழப்பு மதிப்பிட்டிற்கு உட்படாது.

அருவச்சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயட்காலம் பின்வருமாறு

விபரம்	கணனி மென்பெருள்	தொலைக்கல்வி பாடவிதான மேம்படுத்தல் கிரயம்	என்ஐபிஎம் இன் நிலைய பாடல்
பயனுள்ள ஆயட்காலம்	4 ஆண்டுகள்	4 ஆண்டுகள்	N/A

3.2 பாடசாலையிலிருந்து விலகியவர்கள் மற்றும் சிறு தோட்ட உரிமையாளர்களுக்கான இயலளவு விருத்தி பயிற்சிகள்.

நிறுவனம் சிறு தோட்ட உரிமையாளர்களின் அறிவை விருத்தி செய்வதுடன் அவர்களது வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காக இயலளவு விருத்தி பயிற்சிகளை நடத்துகிறது. இந்த பயிற்சிகளுக்கான செலவு சிறுவனத்தின் மூலதன விருத்தி செலவாக கருதப்படுகின்றது. உற்பத்தி செய்கின்ற உயர்தர இறுதி பொருளை நுகர்வோரின் கையில் பார்ப்பதற்கு எதிர்பார்க்கப்படும் அளவிலான விவசாய நடைமுறைகளை விருத்தி செய்வதற்கான அறிவு, திறன்களை முன்னேற்றுவதற்கு சிறு தோட்ட உரிமையாளர்களின் சமகால தேவையை இது பூர்திசெய்கின்றது.

இந்த பயிற்சிகள் ஊடாக சிறு தோட்ட உரிமையாளர்களின் உற்ப்பத்தித்திறன், அறிவு மற்றும் முகாமைத்துவ திறன்கள் முன்னேற்றப்படும் அதேநேரத்தில் நிறுவனத்தினுடைய நன்மதிப்பு விரிவாக்கத்துக்கு வழிவகுக்கும்.

மேற் குறிப்பிடவற்றுக்கு மேலதிகமாக நிறுவனம் பொருந்தோட்ட துறையில் நுழைய தயாராக இருக்கும் இளைய தலைமுறையினரின் ஆற்றல்களை விருத்தி செய்வதற்காக தேசிய தொழிற்பயிற்சி தகைமைகள் (NVQ) முறைமையின் கீழ் பாடசாலையிலிருந்து விலகியவர்களுக்கான பயிற்சிகளை நடத்துகிறது.

இத்தகைய பயிற்சிகளின் பெறுபேறு ஒரு வருடத்திற்குள் உணரப்படும். ஆகவே இது போன்ற முதலீட்டின் பெறுமதி அதே வருடத்தில் பதிவழிக்கப்படும்.

13 ஆண்டு உத்தரவாத கல்வி திட்டத்தின் கீழ் பாடசாலையிலிருந்து விலகியவர்களுக்கான இரண்டு (NVQ) பயிற்சிகள் மற்றும் பொருந்தோட்ட சிறு உரிமையாளர்கள் மற்றும் கீழ் மட்ட தொழிலாளர்களின் அறிவை விருத்திசெய்ய 14 பயிற்சிகளை ரூபா. 0.53 மில்லியன் செலவில் 2020 இல் நிறுவனம் நடத்தியது. கொவிட் 19 நோய்பரவல் காரணமாக சிறு உரிமையாளர்களுக்கான பயிற்சி திட்டங்கள் 2021 ஆம் ஆண்டிற்கு பிற்போடப்பட்டது.

3.3 **ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்**

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் வரலாற்று கிரய அடிப்படையில் திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் திரண்ட வலுகுன்றல் நட்டம் என்பன குறைத்து காட்டப்படுகிறது. இந்த வரலாற்று கிரயம் சொத்திலிருந்து எதிர்பார்க்கும் பயன்பாட்டிற்கு பயன்படுதக்கூடிய நிலைக்கு கொண்டுவருவதல் மற்றும் குறிப்பிடதக்க புனரமைப்புக்காக நேரடியாக செல்வாக்கு செலுத்தும் அனைத்து செலவுகளையும் உள்ளடக்கியது.

ஆதனம், பொறி மற்றும் உபகரணம் வேறுபட்ட பயனுள்ள ஆயட்காலத்தை கொண்டுள்ளது. அவை ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என தனி உருப்படிகளாக (பிரதான பகுதிகளாக) கணக்கிடப்படுகிறது.

3.3.1 பயனுள்ள ஆயட்காலம்

பொறுமானத்தேய்வு என்பது கணக்கீட்டு நோக்கத்திற்காக இழிவுப் பெறுமதியினை மதிப்பீடு செய்யப்பட்ட விதத்தின் அடிப்படையில் பயன்தரு ஆயட்காலம் முழுவதும் நேர்கோட்டு முறையில் சொத்தினை பதிவழித்து கணிப்பிடப்படுகின்றது.

நடைமுறை மற்றும் ஒப்பீட்டு காலப்பகுதிக்கான மதிப்பீடு செய்யப்பட்ட பயன்தரு ஆயட்காலமும் பயன்படுத்தும் பொறுமானத்தேய்வு விதமும் பின்வருமாறு (கீழே உள்ள பந்திகளில் விதிவிலக்காக கூறப்படும் வரைக்கும் இந்த வீதங்கள் பொதுவாக பயன்படுத்தப்பட்டுள்ளது)

இலவசமாக வைத்திருக்கும் கட்டிடங்கள்	**20 வருடங்கள்**	5%
அலுவலக தளபாடங்கள்	**10 வருடங்கள்**	10%
மோட்டார் வாகனங்கள்	**5 வருடங்கள்**	20%
உட்கட்டமைப்பு சொத்துக்கள்	**10 வருடங்கள்**	10%
நூலக புத்தகங்கள்	**10 வருடங்கள்**	10%

விதிவிலக்குகள்

பொறி மற்றும் இயந்திரம், அலுவலக உபகரணங்கள் மற்றும் சமையலறை பொருட்கள், விடுதி துணிகள் போன்ற இதர பெருட்கள் உபகரண பெறுமதியில் உள்ளடங்கும். இந்த சொத்துக்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட வெவ்வேறு பயன்தரு ஆயுட்க்காலங்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளது.

பொறி மற்றும் இயந்திரம்	5 வருடங்கள்
அலுவலக உபகரணங்கள்	5 வருடங்கள்
ஏனைய உபகரணங்கள்	4 வருடங்கள்

- உட்கட்டமைப்பு சொத்துகளில் கணனி வலையமைப்பு உள்ளடக்கப்பட்டுள்ளது. இதன் பயன்தரு ஆயுட்க்காலங்கள் 5 வருடங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- 150 KVA மின்பிறப்பாக்கியின் பயன்தரு ஆயுட்க்காலம் 10 வருடங்களாகும். இது பொறி மற்றும் இயந்திரத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது.
- கைத்தறி, கட்லரிகள் மற்றும் ஆய்வக உபகரணங்கள் மற்றும் பீங்கான் பொருட்கள் ஆகியவை 2019 முதல் நுகர்வு சொத்துக்களாக அங்கிகரிக்கப்படுகின்றன.

அரச கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக பின்வரும் சொத்துக்கள் உட்கட்டமைப்பு சொத்துக்களுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

- வீதி அபிவிருத்தி
- நீர் மற்றும் சக்தி வழங்கல் மற்றும் சக்தி உருவாக்கல் அமைப்பு
- மின்சாரம் வழங்கல்
- கணனி வலையமைப்பு

ஒவ்வொரு நிதியாண்டிலும் பொறுமானத்தேய்வு முறை மற்றும் பயன் தரு ஆயட்காலம் மற்றும் இழிவு பெறுமதி என்பன மீளாய்வு செய்யப்படுவதுடன் பொருத்தமாக இருந்தால் சீராக்கப்படுகின்றது

3.32 **அளவீட்டின் அடிப்படை**

அனைத்து ஆதனம் பொறி மற்றும் உபகரனம் என்பன கிரய முறைக்கு அமைய பெறுமான தேய்வு கணிக்கப்படகிறது. வாகனங்கள் மீள்மதிப்பீட்டு முறைக்கு அமைய அறிக்கையிடப்படுகின்றது. நிறுவனத்துக்கு சொந்தமான காணிக்கான பொறுமானத்தேய்வு கணிப்பிடு மற்றும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை

3.3.2 **கையுவிர்ப்புக்கள்**

எதிர்கால பொருளாதார நன்மை பொருட்களிடமிருந்து எதிர்பார்க்கப்படாத போது ஆதனம், பொறி மற்றும் உபகரனங்களின் உருப்படிகளை முன்கொண்டு சென்ற தொகை அங்கிகரிக்கப்படுவதில்லை.
சொத்துக்களின் முன்கொண்டு சென்ற தொகையினை விற்பனை வருமானத்துடன் ஒப்பிடுவதன் மூலமே கையுதிர்ப்பின் மீதான இலாபம் அல்லது நட்டம் தீர்மானிக்கப்படுகிறது. கையுதிர்ப்பின் மீதான இலாபமும் நட்டமும் நிதி செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

3.3.3 வருடாந்த பொருட்கணக்கெடுப்பு

நிறுவனம் ஒவ்வொரு ஆண்டு இறுதியில் ஓர் வருடாந்த பொருட்க் கணக்கெடுப்பை நடத்துகிறது. மற்றும் பயன்படுத்த பொருளாதாரமற்ற உருப்படிகளை அகற்ற பரிந்துரைக்கிறது.

3.3.4 இலங்கை இராணுவம் கையகப்படுத்திய நிலத்தின் தற்போதய நிலை

1.9499 ஹெக்டெயர் விரிவுபடுத்தப்பட்ட நிலம் மற்றும் மூன்று ஊழியர் விடுதிகள் இலங்கை இராணுவத்தின் ஏழாவது படைப்பரிவுக்கு மற்றப்பட்டது மேற்குறிப்பிட்ட ஆதனத்தின் உரிமை பிரிவு 38 (ஏ) நிலம் கையகப்படுத்தும் சட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்டுள்ளது. 2018 ஒக்டோபரில் நிறுவனம் ரூபா 155.0 மில்லியன் இழப்பீட்டை பெற்றுக்கொண்டது.
2017 இல் இருந்து 2021 வரை நடைமுறைப்படுத்தப்பட்டுள் விசேட அபிவிருத்தி திட்டத்தின் இரண்டாவது கட்டத்திற்கு பயன்படுத்த பாதுகப்பு வைப்பின் கீழ் வைக்கபட்டது.

4.0 உட்கட்டமைப்பு வசதிகளுக்கான வைப்புகள்

நிறுவனங்களுக்கு வழங்கும் உட்கட்டமைப்பு சேவை மீதுள்ள ஒப்பந்த பொறுப்புக்கு எதிராக வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு வைப்பு இதில் உள்ளடங்கும்.

5.0 இருப்புக்கள்

நிறுவன வெளியீடுகள் அச்சிடும் மூலப்பொருட்கள், எழுதுகருவிகள் மற்றும் அலுவலக தேவைகள், ரயர், கட்டிட பராமரிப்புக்கான மூலப்பொருட்கள், ஏனைய நுகர்வு பொருட்கள் என்பனவற்றை இருப்புக்கள் கொண்டுள்ளது. இவைகள் முதல் வந்தது முதல் வெளியே கொள்கையின் அடிப்படைகளில் கிரயத்தில் பெறுமதியிடப்படுகின்றன.
தேயிலை அபிவிருத்தி திட்டத்திலிருந்து நன்கொடை செய்யப்பட்ட வெளியீட்டு புத்தகங்களை வெளியீட்டு இருப்பு கொண்டுள்ளது.

"பயன்படுத்தப்படும் கிரய சமன்பாடு: கொள்வனவு கிரயம் மாற்றல் கிரயம் ஏனைய கிரயம்"

இருப்புக்களின் பராமரிப்பு தொகை கீழே பட்டியலிடப்பட்டுளளது.

பொருட்கள்	நியாயமான பெறுமதியில் (ரூபா'000)	விற்பனை கிரயம்	நியாயமான பெறுமதியில் (ரூபா '000)
எழுதுகருவிகள்	527,295.30	-	527,295.30
அச்சிடும் மூலப்பொருட்கள்	1291720.00	-	1,291,720.00
நலன்புரி பொருட்கள்	35,839.00	-	35,839.00
நுகர்வு பொருட்கள்	128,081.80	-	128081.80
பராமரிப்புக்கான மூலப்பொருட்கள	232,340.00	-	232,340.00
வெளியீட்டுகள்	819,850.00	-	819,850.00

கட்லரி மற்றும் கைத்தறி பொருட்கள்

கைத்தறி பொருட்கள்	1,062,573/27	-	1,062,573/27
கட்லரி மற்றும் பீங்கான்	234,775/27	-	234,775/27
மொத்தம்	3,967,720/14		3,967,720/14

நன்கொடை செய்யப்பட்ட வெளியீட்டு இருப்புக்கள்

நன்கொடை செய்யப்பட்ட வெளியீட்டு புத்தகங்களின் பெறுமதி வெளியீட்டு இருப்பில் உள்ளடங்கியுள்ளது. இது நடைமுறை பொறுப்பின் கீழ் வேறுபாட்டு வருமான கணக்கில் காட்டப்பட்டுள்ளது. இது பொருத்தமான கணக்கீட்டு காலத்திற்கு வரும்போது வருமாகமாக அங்கிகரிக்கப்படும்

6.0 காசு மற்றும் காசுக்கு சமமானவை.

காசு மற்றும் காசுக்கு சமமானவை கையில் உள்ள காசு, நடைமுறை கணக்கு மீதி மற்றும் இலங்கை வங்கி அத்துருகிரிய கிளையில் வைக்கப்பட்டுள்ள 3 மாதத்திற்கு குறைவான குறுங்கால வைப்புக்களையும் உள்ளடக்குகின்றது.

7.0 நிதி கருவிகள்

நிறுவனம் ஆரம்பத்தில் கடனகள் மற்றும் வருமதிகள் மற்றும் வைப்புக்களை அவைகள் உருவாக்கப்பட்ட திகதியில் அங்கிகரிக்கிறது. நிறுவனம் சொத்து காலவதியகுவதிலிருந்து காசுப்பாச்சலுக்கு நிதி சொத்துக்களை அங்கீகரிக்கிறது.

முதிர்ச்சியடைந்த நிதி சொத்துக்கள்

கடன் பத்திரங்களை முதிர்வு வரைக்கும் வைத்திருக்கும் இயலுமையினையும் மற்றும் நேர்மறையான நோக்கத்தையும் நிறுவனம் கொண்டுள்ளது. பின்னர் அத்தனைய நிதி சொத்துக்கள் முதிர்ச்சியடைந்ததாக வகைப்படுத்தப்படுகின்றது.
முதிர்ச்சியடைந்த நிதிச்சொத்துக்கள் ஆரம்பத்தில் நியாயமான பெறுமதியில் அங்கிகரிக்கப்படுகிறது. அத்துடன் பயனுள்ள வட்டி முறையை பயன்படுத்தி நேரடி கூறப்படும் பரிமாற்றல் கிரயம் சேர்க்கப்படுவததுடன் ஏதாவது வலுவிழத்தல் நட்டம் குறைக்கப்படும். முதிர்ச்சியை அண்மிக்காத முதவீட்டின் மிக சிறய தொகையை விட எந்தவொரு விற்பனை அல்லது வகைப்படுத்தல்.

கடன் மற்றும் வருமதிகள்.

கடன் மற்றும் வருமதிகள் என்பது ஒரு செயலில் உள்ள சந்தையில் மேற்கோள் காட்டப்படாத நிலையான அல்லது திர்மானிக்ககூடிய கொடுப்பனவுடன் கூடிய நிதியியல் சொத்துக்கள். அவ்வாறான சொத்துக்கள் ஆரம்பத்தில் நியாயமான பெறுமதியுடன் ஏதாவது நேரடியாக காரண பரிமற்றல் கிரயம் சேர்க்கப்பட்டு அங்கிகரிக்கப்படுகின்றது. கடன் மற்றும் வருமதிகள் ஆரம்ப அங்கிகாரத்தை தொடர்ந்து எதாவது வலுவிழப்பு நட்டங்கள் குறைத்து பயனுள்ள வட்டி வீத முறைய பயன்படுத்தி காலக்கழிவு கிரயத்தில் அளவிடப்படுகின்றது.

8.0 ஊழியர் ஓய்வு நன்மை

வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டம் - பணிக்கொடை

33	விசேட அபிவிருத்தி திட்டம் - பெருந்தோட்டத்துறை பட்டம் வழங்கும் நிறுவமாக தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.	80,817,396.60	60,782,603.40
	கணக்கிட்டு நியம மாற்றங்கள்		
	பொது திறைசேரியால் பங்களிக்கப்பட்ட மூலதன மற்றும் மீண்டெழும் மானியம் பொதுத்துறை கணக்கிட்டு நியமம் இல.11 இற்கு அமைவாக நிறுவனத்தின் வருமானமாக அங்கிகரிக்கப்பட்டுள்ளது. எனவே இலங்கை பொதுத்துறை கணக்கிட்டு நியமம் இல.11, 01.01.2016 திகதியிலிருந்து நடைமுறைக்கு வருகிறது. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமானத்தேய்வு மற்றும் வலுக்குன்றல் கிரயங்கள் ஒவ்வொரு கணக்கீட்டு காலத்திலும் தனித்தனியாக கணக்கிடப்படுகிறது.		
34	**பயிற்சிகள் மூலம் கிடைத் வருமானம்**	**2020**	**2019**
		ரூபா	ரூபா
a	**கல்வி, தொழில்வாண்மை பயிற்சிகள்**		
	பெருந்தோட்ட முகாமைத்துவ தேசிய டிப்ளோமா	1,415,500.00	1,071,270.00
	பெருந்தோட்ட விரிவாக்கல் முகாமைத்துவ தேசிய டிப்ளோமா - NVQ-5	1,351,000.00	1,499,000.00
	பெருந்தோட்ட பயிர் தொழில்நுட்ப தேசிய டிப்ளோமா - NVQ-5	1,150,000.00	1,960,500.00
	பெருந்தோட்ட பயிர் தொழில்நுட்ப உயர் டிப்ளோமா - NVQ-6	1,100,250.00	500,000.00
	கணக்கீட்டு, நிதி முகாமைத்துவ சான்றிதழ் பாடநெறி	21,500.00	439,500.00
	கணக்கு பதிவு, பெருந்தோட்ட கணக்கீட்டு சான்றிதழ் பாடநெறி	769,635.00	782,000.00
	பெருந்தோட்ட, நிதி மற்றும் கிரய கணக்கீட்டு, உயர்தர சான்றிதழ் பாடநெறி	45,000.00	70,000.00
	தேயிலை உற்பத்தி மற்றும் தொழிற்சாலை பிரயோக தொழில்வாண்மை பயிற்சி	-	945,000.00

	மொழித் திறன் பரீட்சை	-	270,000.00
	நுண்நிதி சான்றிதழ் பாடநெறி	50,500.00	1,549,500.00
	விவசாய தொழில்நுட்ப சான்றிதழ் பாடநெறி	30,000.00	260,000.00
	மனித வள முகாமைத்துவ சான்றிதழ் பாடநெறி	-	286,000.00
		5,933,385.00	**9,632,770.00**
b	**முகாமைத்துவ மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி பயிற்சி**	**ரூபா**	**ரூபா**
	முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி	290,000.00	2,210,640.00
	தொழில்நுட்ப அபிவிருத்தி பயிற்சி	455,000.00	270,000.00
		745,000.00	**2,480,640.00**

c	திறன் அபிவிருத்தி பயிற்சிகள்	2020	2019
	தேயிலை தொழிற்சாலை அலுவலர் திறன் அபிவிருத்தி	280,000.00	340,000.00
	இறப்பர் தொழிற்சாலை அலுவலர் திறன் அபிவிருத்தி	-	210,000.00
		280,000.00	**550,000.00**

d	**13** ஆண்டு கல்வித் திட்டம்		
	பெருந்தோட்ட தொழிற்சாலை உதவியாளர் மற்றும் வெளிக்கள உதவியாளர் - NVQ-4	13,488,810.32	39,301,342.00
		13,488,810.32	**39,301,342.00**

e	பெருந்தோட்ட முகாமைத்துவ உயர்தர பாடநெறி		
	பெருந்தோட்ட முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப டிப்பிளோமா - அறிமுக பாடநெறி	**1,629,000.00**	**2,671,000.00**

f	தொழிலாளர் அபிவிருத்தி நிகழ்ச்சிகள் மற்றும் பயிற்சி பட்டறைகள்		
	தொழிலாளர் அபிவிருத்தி நிகழ்ச்சிகள்	60,000.00	-
	விசேட பயிற்சி பட்டறைகள்	277,500.00	776,332.00
		337,500.00	**776,332.00**

g	விசேட நிகழ்ச்சிகள்	ரூபா	ரூபா
	விசேட நிகழ்ச்சிகள்	257,740.00	12,128,925.52
	NIPM உறுப்பினர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி	-	416,500.00
	ஏனைய பயிற்சி வருமானம்	35,000.00	-
		292,740.00	**12,545,425.52**

h	வெளிநாட்டு பயிற்சிகள்	-	-

i	வெளிவாரி பரீட்சை வருமானம்	941,091.50	1,334,596.80

j	**பயிற்சியுடன் தொடர்புடைய செயற்பாட்டு வருமானம்**	100,000.00	-

	மொத்த பயிற்சிநெறி வருமானம்	**23,747,526.82**	**69,292,106.32**

35	**வசதிகளை வாடகைக்கு வழங்குவதிலிருந்து வருமானம்**	LKR	LKR
	விடுதி வசதிகளை வெளித்தரப்பு நிகழ்ச்சிகளுக்கு வாடகைக்கு வழங்தல் - அத்துருகிரிய பயிற்சி நிலையம்	6,365,758.03	20,320,206.45
	விடுதி வசதிகளை வெளித்தரப்பு நிகழ்ச்சிகளுக்கு வாடகைக்கு வழங்தல் - பொகவந்தலாவ பிரதேச நிலையம்	-	8,797.50
	உள்ளக மாணவர்களுக்கு விடுதி வசதிகளை வழங்கிய வருமானம்	-	39,588.00
		6,365,758.03	**20,368,591.95**

36	**வட்டி வருமானம்**	**ரூபா**	**ரூபா**
	பணியாளர் கடன் வட்டி - இடர் கடன்	248,946.38	171,304.63
	அங்கத்துவ கணக்கிலிருந்து வட்டி வருமானம்	15,210.02	11,105.25
	வங்கி வைப்புகளிலிருந்து வட்டி வருமானம்	14,394,244.15	17,027,737.35
	விசேட கடனிலிருந்து வருமானம்	3,963.60	4,991.20
	பயனுள்ள வருட வட்டி காரணமாக காலக்கழிவு இலாபம் / (நட்டம்)	82,378.41	250,354.60
		14,744,742.56	**17,465,493.03**

37	**ஏனைய வருமானம்**	**ரூபா**	**ரூபா**
a	**நானாவித வருமானம்**		
	வருமானம் - கடந்தகால வினாப்பத்திரங்கள் மற்றும் விண்ணப்பங்கள்	2,250.00	4,000.00
	வீட்டு வாடகை வருமானம்	236,977.84	205,439.41
	போக்குவரத்து வருமானம்	12,300.00	15,397.00
	கேள்வி கோரல் கட்டணம்	300,500.00	164,250.00

	வெளியீடுகள்	13,450.00	34,440.00
	தொலைபேசி	34,687.53	3,337.23
	அங்கத்தவர் சந்தா	32,375.00	273,115.00
	ரி சேட் மற்றும் கழுத்துப்பட்டி விற்பனை வருமானம்	27,750.00	159,620.00
	ஏனைய நானாவித வருமானம்	223,301.84	18,140.00
		883,592.21	**877,738.64**

(b)	**பாவிக்கப்பட்ட பொருட்கள் அகற்றல் வருமானம்**	**5,850.00**	**57,500.00**
			-
(c)	**வருமான கூற்றில் திரும்ப எழுதப்பட்டவை**		
	பணிக்கொடை மிகை ஏற்பாடு	-	785,852.54
	ஐயக்கடன் மிகை ஏற்பாடு	215,740.06	-
	மொத்தம்	**215,740.06**	**785,852.54**
	ஏனைய வருமான மொத்தம்	**1,105,182.27**	**1,721,091.18**

38	**கூலி, சம்பளங்கள் மற்றும் ஊழியர் நன்மைகள்**	LKR	LKR

a	**தனிப்பட்ட ஊதியம்**		
-	சம்பளம் மற்றும் கூலி	24,181,402.91	22,782,893.94
	வாழ்க்கை செலவு மற்றும் ஏனைய கொடுப்பனவு	7,069,952.93	7,455,985.07
	மேலதிக நேர கொடுப்பனவு	1,557,834.22	2,710,352.03
	விடுமுறை ஊதியம்	453,495.00	500,735.40
	நிறுவன பணியாளர் விரிவுரை கட்டணம்	180,000.00	237,750.00
	ஊ.ந.நி. பங்களிப்பு	879,300.53	833,022.90

	ஊ.சே.நி. பங்களிப்பு	3,377,878.02	3,210,495.30
	CPPS பங்களிப்பு	139,324.20	123,095.76
	தவிசாளருக்கான ஊதியம் மற்றும் பணிப்பாளர் சபை கொடுப்பனவு	1,083,744.38	1,348,447.98
	பயிலுனர்களுக்கான நாள் சம்பளம்	164,700.00	482,925.00
		39,087,632.19	**39,685,703.38**

b	**பிரயாண செலவினங்கள்**		
	பிரயாணம் மற்றும் வாழ்க்கைப்படி (உள்நாட்டு)	389,458.00	475,776.00
			-
		389,458.00	**475,776.00**

c	**ஓய்வூதிய நன்மைகள்**		
	பணிக்கொடைக்கான அதிகரிக்கப்பட்ட ஏற்பாடுகள்	1,943,660.64	-
	செலுத்தப்பட்ட இழப்பீடுகள்	-	452,970.00
		1,943,660.64	452,970.00

d	**பங்களிப்புகள், மானியங்கள் மற்றும் நலன்புரி**		
	சேவைக்கால பயிற்சி மற்றும் பணியாளர் பயிற்சி இயலளவை கட்டியெழுப்புதல்	66,000.00	523,337.73
	ஊழியர் நலன்புரி செயற்பாடு	383,337.05	488,594.50
	அங்கத்துவம் மற்றும் சந்தா	241,514.80	76,830.00
	மருத்துவ உதவி பங்களிப்பு	3,028,021.25	1,714,534.69
		3,718,873.10	**2,803,296.92**

	மொத்த சம்பளம், கூலி மற்றும் ஊழியர் நன்மைகள்	**45,139,623.93**	**43,417,746.30**

39	**விநியோகம் மற்றும் நுகர்வு பயன்பாடு**		LKR
	அச்சிடும் பொருட்கள் மற்றும் காகிதங்கள்	1,071,600.60	1,329,284.00

	காகிதாதிகள் மற்றும் அலுவலக தேவைகள்	506,329.62	664,402.48
	நுகரக்கூடியவை	329,349.40	471,688.65
	எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி	1,557,923.47	2,027,960.35
	பருவகால வெளியீடுகள் மற்றும் பத்திரிகைகள்	54,090.00	82,394.80
	சீருடைகள்	96,000.00	116,000.00
	நிறுவன வெளியீடுகள்	499,000.00	322,190.20
	மொத்த விநியோகம் மற்றும் நுகர்வு பயன்பாடு	**4,114,293.09**	**5,013,920.48**

40	**நிலையான சொத்துக்கள் திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு**		
	பொறிகள் மற்றும் இயந்திரங்கள்		137,390.00
	கட்டிடங்கள்	3,789,889.22	1,713,671.51
	உபகரணங்கள்	1,379,346.17	1,578,767.99
	நீர், தொலைபேசி மற்றும் மின்சாரம்	472,257.00	165,125.60
	மோட்டர் வாகனம்	3,253,048.04	3,542,208.27
	மொத்த திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு	**8,894,540.43**	**7,137,163.37**

41	**தொடர்பாடல், பயன்படுத்தல் மற்றும் ஒப்பந்த சேவைகள்**	LKR	LKR
	தொலைபேசி மற்றும் இணையதளம்	1,875,303.72	1,142,555.79
	அஞ்சல்	212,345.00	284,314.00
	மின்சாரம் மற்றும் நீர்	2,567,682.15	3,203,671.28
	காப்புறுதி (கட்டிடங்கள் மற்றும் உபகரணங்கள், காசு போன்றவை)	278,788.92	259,753.56
	திட்ட மீண்டெழும் செலவு		-
	பாதுகாப்பு சேவை	3,852,290.00	3,554,146.70
	கணக்காய்வு கட்டணம் (வெளியக)	600,000.00	600,000.00
	வாகன வாடகை கட்டணங்கள்	161,182.00	287,478.05

	துப்பரவு மற்றும் தூய்மைப்படுத்தும் வேலை	2,038,644.00	2,133,050.00
	வங்கி கட்டணங்கள்	22,650.00	38,050.00
	முத்திரை வரி வீதம் மற்றும் வரி	71,542.33	74,962.64
	சட்ட ரீதியான கட்டணங்கள்	438,532.00	30,000.00
			-
		12,118,960.12	**11,607,982.02**

b	**ஊடகம், விளம்பரம் மற்றும் பிரச்சாரம்**	**ரூபா**	**ரூபா**
	விளம்பர செலவினங்கள்	258,406.20	1,457,917.24
	பொழுதுபோக்கு	28,562.50	95,985.00
		286,968.70	**1,553,902.24**

	மொத்த தொடர்பாடல் பயன்படுத்தும் சேவை மற்றும் ஊடக செலவுகள்	**12,405,928.82**	**13,161,884.26**

42	**பயிற்சி செலவுகள்**	**ரூபா**	**ரூபா**
	வருகை விரிவுரையாளர்களுக்கான கட்டணம்	2,420,123.50	4,532,065.04
	பயிற்சி செயற்பாட்டுடகளுடன் தொடர்புடைய குழுக்களுக்கான கட்டணங்கள்	12,000.00	139,169.00
	பயிலுனர்களுக்கான உணவு மற்றும் தங்குமிடம்	1,124,825.81	3,278,767.64
	துணி சலவை	2,400.00	25,800.00
	அறவிடமுடியா கடன் குறை ஏற்பாடு		914,544.56
	வெளிவாரி பரீட்சை செலவு	540,164.60	752,980.00
	விருது வழங்கும் விழா மற்றும் கல்வி நிகழ்வுகள்	196,903.90	2,425,946.09
	கற்கை உபகரணங்கள்	295,901.20	214,460.00
	ஏனைய பயிற்சி செலவுகள்	531,746.50	1,512,457.20
	விளம்பரம் மற்றும் பிரச்சாரம்	735,857.00	4,635,896.25
	13 அண்டு கல்வித் திட்ட செலவு	4,611,446.84	9,219,306.07

	மொத்தம்	10,471,369.35	27,651,391.85
	ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கிரயம்		4,286.00
	பட்டம் வழங்கும் தரத்துக்கு நிறுவனத்தை மாற்றும் பயிற்சி வசதி அபிவிருத்தி மற்றும் NVQ பயிற்சி வசதிகள் கிரயம்	352,000.00	1,068,980.00
	சிறு தோட்ட உரிமையாளர்கள் மற்றும் NVQ மாணவர்களுக்கான இயலளவை கட்டியெழுப்பும் பயிற்சி	526,446.00	3,667,875.92
	மொத்த பயிற்சி செலவுகள்	**11,349,815.35**	**32,392,533.77**

43	**வாடகைக்கு விடப்பட்ட வசதிகளுக்கான தொடர்பான செலவுகள்**	**ரூபா**	**ரூபா**
	உணவு செலவு மற்றும் தங்குமிட வசதிகள்	2,050,662.97	7,298,816.70
	விடுதி நுகர்வு	96,661.54	181,909.25
	சம்பளம், நாட்கூலி மற்றும் வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு	2,100.00	478,800.00
	சேமலாப நிதியம்	252.00	55,836.00
	ஊ.ந.பொ.நிதியம்	63.00	13,959.00
	வாடகைக்கு விடப்பட்ட வசதிகளுக்கான மொத்த செலவுகள்	**2,149,739.51**	**8,029,320.95**

44	**பொகவந்தலாவ செயற்பாட்டு செலவுகள்**		
	மின்சாரம்	213,241.65	483,140.55
	தொலைபேசி மற்றும் தபால்	27,478.27	41,210.64
	பராமரிப்பு		9,250.00
	சுத்திகரிப்பு மற்றும் கழிவகற்றல் சேவை	3,745.00	508,000.00
	உணவு மற்றும் தங்குமிடம்		-
	சம்பளம் மற்றும் கூலி	1,030,789.28	835,800.00
	கொடுப்பனவுகள்	48,300.00	327,450.00
	ஊழியர் நன்மைகள்	8,285.00	22,955.00

	நாட் கூலி	419,650.01	483,364.50
	ஊ.ந.பொ.நிதியம்	18,889.50	25,074.00
	சேமலாப நிதியம்	75,558.00	100,296.00
	நுகர்வு	18,578.00	51,479.00
	மொத்த பொகவந்தலாவ செலவுகள்	**1,864,514.71**	**2,888,019.69**

45	**சொத்துகளின் பெறுமானத்தேய்வு மற்றும் பெறுமதியிழப்பு**		
	பெறுமானத்தேய்வு	26,135,846.00	24,677,970.21
	பெறுமதியிழப்பு	523,088.23	458,887.00
		26,658,934.23	**25,136,857.21**

46	**ஏனைய செலவுகள்**	LKR	LKR
	ஏனைய குழுக்களுக்கான சலுகை கொடுப்பனவுகள் மற்றும் தொழில்சார் அறவீடுகள்	270,031.04	584,559.31
	அறவிடமுடியா கடன் பதிவழிப்பு		289,901.40
	விஷேட நலன்புரி திட்டம்	14,266.55	201,663.00
	சுற்றாடல் கொள்கையை அமுல்படுத்துதல்	-	163,272.56
	சேதமான இருப்பு மற்றும் பழைய உபகரணங்கள் அகற்றியதன் மூலமான நட்டம்	20,098.82	45,648.18
	தோட்ட பராமிப்பு	212,695.00	223,950.00
	ஏனைய செலவுகள்	431,257.09	133,802.00
		948,348.50	**1,642,796.45**
47	**நிதிசார் இடர் முகாமைத்துவம்**		

*கடன் ஆபத்து என்பது நிறுவனத்தின் நிதி இழப்புக்கான ஆபத்தாகும். ஒரு நிதிக்கருவியின் வாடிக்கையாளர் அல்லது எதிர்தரப்பினர் அதன் ஒப்பந்த கடமைகளை நிறைவேற்ற தவறினால், அதாவது நிறுவனத்தின் வாடிக்கையாளர் மற்றும் முதலீட்டு பத்திரங்களிலிருந்தான பெறுவனவுகளினால் கிடைக்கிறது. ஆண்டின் இறுதியில் கடன்பட்டோர் கணக்கு இறுதி மீதிக்கு 6 வீதம் ஏற்பாடு வழங்கப்படுகின்றது.

*இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்டுள்ள ஆண்டிறுதி முறிகளுக்கான வீதத்தின் படி பயனுள்ள வருடத்திற்கான வட்டிவீதத்திற்கு அமைவாகவும் கடனுக்கான வட்டி, முற்பணம் மற்றும் வட்டி என்பன கணிப்பிடப்படுகின்றது.

கடன் மற்றும் முற்பணங்கள் மீதான பெறுமதியிழப்பு நட்டம் ஏற்பாடு BF மீதி	160,660.07	198,386.45
கடன் மற்றும் முற்பணங்கள் மீதான பெறுமதியிழப்பு நட்டம் ஏற்பாடு CF மீதி	78,281.66	160,660.07
கடன் மற்றும் முற்பணத்திலிருந்து வட்டி வருமானத்துக்கு மாற்றம் செய்யப்பட்ட இலாபம் / (நட்டம்)	82,378.41	37,726.38
ஊழியர்களுக்கான கடன் மற்றும் முற்பணத்திலிருந்து வட்டி வருமானம்	252,909.98	176,295.83
பயனுள்ள வட்டி விகித முறைக்கு அமைவாக வட்டி கணிப்பிடப்படுதல்.	331,191.64	336,955.90
கடன் மற்றும் முற்பணங்கள் மீதான பெறுமதியிழப்பு	(78,281.66)	(160,660.07)

குறுங்கால முதலீட்டின் முலம் கிடைத்த வட்டி

கடன் கொள்வனவு மூலம் எழுந்த பொறுப்புகள் மற்றும் பணிக்கொடை கொடுப்பனவினை பாதுப்பதற்காக குறுங்கால வைப்பில் நிறுவனம் முதலிட்டுள்ளது. குறைவடையும் கிரய முறையில் இந்த முதலீடு அறிக்கை செய்யப்படுகிறது.

வினைத்திறனான வருடாந்த வட்டிக்கான காலக்கழிவு நட்ட ஏற்பாடு BF மீதி	-	212,628.22
வினைத்திறனான வருடாந்த வட்டிக்கான காலக்கழிவு நட்ட ஏற்பாடு CF மீதி	-	-
நிலையான வைப்பு முதலீடுகளிலிருந்து கிடைத்த வட்டி வருமானத்துக்கு மாற்றம் செய்யப்பட்ட இலாபம் / (நட்டம்)	-	212,628.22
குறுங்கால முதலீட்டின் முலம் கிடைத்த வட்டி	14,409,454.17	17,038,842.60
2019 இன் 8.45 % மற்றும் 2018 இன் 10.99 %, 2018 இன் 5.05 % விகித பயனுள்ள வட்டிவிகிதத்திற்கு அமைவாக வட்டி கணிப்பிடப்படுகிறது.	-	15,821,367.21
நிலையான வைப்பு மீதான பெறுமதியிழப்பு	14,409,454.17	1,217,475.39

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள முறிகள் விகிதத்திற்கு அமைவாக 2019 ஆம் ஆண்டில் வருடாத்திற்கு 8.45% விகிதமும் மற்றும் 2020 ஆம் ஆண்டில் வருடாத்திற்கு 5.05% விகிதமாகவும் பயனுள்ள வட்டிவிகிதம் இருப்பதாக நிறுவனம் கருதுகின்றது.

தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்

பிரிவுசார் அறிக்கையிடல்

இந்த அறிக்கை ரூபா '000" ஆக சமர்பிக்கப்பட்டுள்ளது.

நிறுவனம் மூன்று (3) வெவ்வேறுபட்ட பிரிவுகளை அங்கிகரிக்கின்றது. அவையாவன பயிற்சிகள் தொடர்பான செயற்பாடுகள், வாடகை வசதிகள் மற்றும் ஏனைய துணை சேவைகள் ஆகும்.
2018 மற்றும் 2019 ஆம் ஆண்டிற்கான ஒவ்வெரு பிரிவிலுமுள்ள மிகை அல்லது பற்றாக்குறை பின்வரும் அட்டவனையில் காட்டப்பட்டுள்ளது.

பிரிவின் வகுதி	**பயிற்சி செயற்பாடுகள்**		**வாடகை வசதிகள்**		**ஏனைய துணை சேவைகள்**		**மொத்தம்**	
	2020	2019	2020	2019	2020	2019	2020	2019
வருமானம்								
ஈட்டிய வருமானம்	23,748	69,292	6,366	-	15,850	39,555	45,963	108,847
மானியம் - விசேட திட்டங்கள்	3,000	1,000		-	77,817	59,783	80,817	60,783
மூலதன மானியம்	25,750	4,850		16,029		121	25,750	21,000
மீண்டெழும் மானியம்	19,934.83	18,305	4,984	4,576	32,892.47	31,119	57,811	54,000
மொத்தம்	72,432	93,447	11,349	20,605	126,560	130,578	210,342	244,630
செலவினங்கள்								
ஊதியங்கள், சம்பளம் மற்றும் ஊழியர்களுக்கான நன்மைகள்	17,235	14,718	3,282.	3,679	24,621.	25,020	45,140	43,418
வழங்கலகள் மற்றும் நுகர்வு பயன்பாடு	1,570	1,700	299.	425	2,244.	2,889	4,114	5,014
திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு	3,396	2,419	646.	605	4,851.	4,113	8,895	7,137
தொடர்பாடல் மற்றும் பயனுறுதிவாய்ந்த சேவைகள்	4,736	4,462	902.	1,115	6,766.	7,585	12,406	13,162

Segmental Category	**பயிற்சி செயற்பாடுகள்**		**வாடகை வசதிகள்**		**ஏனைய துணை சேவைகள்**		**மொத்தம்**	
ஆற்றல் விருத்தி நிகழ்ச்சித்திட்டம் உள்ளடங்கலான பயிற்சித்திட்ட செலவினங்கள்	11,350	32,393	-	-		-	11,350	32,393
வாடகை வசதிகளை பெற்று கொள்வதுடன் தொடர்புடைய செலவுகள்		-	2,150	8,029	-	-	2,150	8,029
பொகவந்தலாவ பிராந்திய நிலைய செலவு		-	1,865	2,888	-	-	1,865	2,888
பெறுமானத்தேய்வு / பெறுமதியிழப்பு செலவு	10,178.87	8,521	1,938.	2,130	14,541	14,486	26,659	25,137
ஏனைய செலவுகள்	321	557	68.	139	517.	947	948	1,643
மொத்த செலவுகள்	48,789	64,769	9,621	11,764	53,543	55,040	113,526	138,820
தேறிய மிகை / (பற்றாக்குறை)	23,643	28,678	1,729	8,841	73,017	75,538	96,816	105,810
ஊழியர் எண்ணிக்கை	21	20	4	5	30	33	55	58

பிரிவுக்கான நேரடி காரணமான செலவுகளுக்கு உரிய பகுதிகளுக்காக அறவிடப்படுகிறது. ஏனையவை பிரிவுகளுக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள ஊழியர் எண்ணிக்கைக்கு ஒதுக்கப்பட்ட கணக்கீடாகும்.

வருமானம் ஈட்டலுக்கு அமைய, ஈட்டப்பட்ட வருமானம் கணக்கிடப்படுகிறது.

நிறைவேற்றப்பட்டுள்ள வரவுசெலவு திட்ட செயற்பாடுகளுக்கான மூலதன அளிப்பு பகிரப்பட்டுள்ள கணக்கீடு.

மீண்டெழும் மானியம் என்பது ஊழியர்கள் தொகைக்கு ஒதுக்கப்பட்ட கணக்கீடாகும்

தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்

நிதிப் பொழிப்புக்கள் (ரூபா '000')

விபரம்	2012	2013	2014	2015	2016	2017	2018	2019	2020
வருமானம்									
திறைசேரி மானியம் - மீண்டெழும்	8,480	18,744	24,792	28,502	38,961	40,000	50,000	54,000	57,811
வருமான கூற்றுக்கு திருப்பி பதிவிட்ட அரசாங்க மானியம்	9,415	9,253	10,937	15,362	24,243	25,162	81,730	78,115	106,041
ஆற்றல் விருத்தி நிகழ்ச்சிகளை அரசாங்க மானியம் (சிறு தோட்ட உரிமையாளர்கள் மற்றும் பாடசாலை கல்வி நிறைவு செய்தோர்)	4,865	7,498	9,900	7,710	8,446	10,012	9,221	3,668	526
பயிற்சி மூலம் உருவாக்கப்பட்ட வருமானம்	13,731	11,573	10,037	18,010	12,787	15,853	31,009	69,292	23,748
பொகவந்தலாவ பிராந்திய நிலைய வருமானம்	3,796	8,247	7,824	5,366	4,835	1,896	17,927	20,369	6,366
ஏனைய உருவாக்கப்பட்ட வருமானம்	8,935	7,407	7,457	9,847	12,402	22,472	9,889	19,187	15,850
மொத்த வருமானம்	49,222	62,722	70,947	84,796	101,674	115,395	199,776	244,630	210,342
செலவு									
மொத்த ஆளணி வேதனம்	20,907	18,794	19,453	30,907	31,834	38,796	45,577	43,418	45,140
பயிற்சி செலவுகள்	6,425	4,256	4,439	8,208	5,880	10,123	16,613	28,725	10,823
சிறு தோட்ட உரிமையாளர்களுக்கு இயலளவை விருத்திசெய்யும் பயிற்சிகளுக்கான செலவுகள் (FOC)	4,865	7,498	9,936	7,711	8,446	10,012	9,221	3,668	526
ஏனைய செலவுகள்	12,472	17,198	20,255	19,598	21,959	27,655	37,461	37,873	30,377
மொத்த செயற்பாட்டு செலவுகள்	44,669	47,746	54,083	66,424	68,119	86,586	108,872	113,683	86,867
மொத்த செயற்பாட்டு செலவுகளில் அரசாங்கத்தின் மீண்டெழும் மானிய வீதம்	19%	39%	46%	43%	57%	46%	46%	48%	67%
பெறுமானத்தேய்வுக்கு முன்னரான மிகை / (பற்றாக்குறை)	4,553	14,976	16,864	18,372	33,555	28,809	90,905	130,946	123,475
பெறுமானத்தேய்வு / காலக்கழிவு	9,150	10,495	15,833	17,740	18,951	20,533	24,407	25,137	26,659
பெறுமானத்தேய்வுக்கு பின்னரான (பற்றாக்குறை) / தேறிய மிகை.	(4,597)	4,481	(1,833)	632	14,604	8,276	66,498	105,810	96,816
பயிற்சிகளின் எண்ணிக்கை- (ஈட்டிய வருமானம்)	61	22	32	30	22	32	57	41	17
பங்குபற்றியோர் எண்ணிக்கை	2135	772	993	1,101	586	958	1779	1,015	453

பாடசாலையிலிருந்து வீலகியோர் மற்றும் சிறு தோட்ட உரிமையாளர்களுக்கான ஆற்றல் விருத்தி பயிற்சிகளுக்கான மொத்த செலவுகள்	188	236	355	196	160	230	232	125	14
பாடசாலையிலிருந்து வீலகியோர் மற்றும் சிறு தோட்ட உரிமையாளர்களுக்கான ஆற்றல் விருத்தி பயிற்சிகளுக்கான மொத்த செலவுகள்	4865	7,498	9,936	7,711	8446	10012	3,668	3,668	526
பயிற்சியளிக்கப்பட்ட சிறு தோட்ட உரிமையாளர்களின் எண்ணிக்கை	**8,196**	**12,149**	**25,100**	**12,825**	**10,840**	**12,661**	**12940**	**5,414**	693
பயிற்சியளிக்கப்பட்ட மொத்த எண்ணிக்கை	**10331**	**12921**	**26093**	**13,926**	**11426**	**13619**	**14719**	**6,429**	1,142
வருடத்திற்கான மொத்த பயிற்சிகள்	249	258	387	226	182	262	289	166	31
ஊழியரகள் எண்ணிக்கை	**46**	**41**	52	46	46	58	58	59	56
ஒவ்வெரு ஊழியர்களுக்கும் ஈட்டிய வருமானம் ரூபா. ‘000“	575	664	487	722	653	693	1,014	1,845	821
ஒவ்வெரு சிறு தோட்ட உரிமையாளர்களுக்கான பயிற்சி செலவுகள் ரூபா. ‘000“	0.59	0.62	0.40	0.60	0.78	0.79	0.28	0.68	0.76
நிறுவனத்தின் தேறிய சொத்து	19,660	24,619	122,325	126,563	203,880	232,812	453,359	843,911	940,685

தவிசாளர்
தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்

2020 ஆம் ஆண்டு 31 ஆந் திகதி முடிவடைந்த வருடத்திற்கான தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் நிதிக்கூற்றுகள் மற்றும் ஏனைய சட்ட, ஒழுங்கு முறைகளின் தேவைபாடுகள் தொடர்பாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12வது உறுப்புரைக்கமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

மேற்கூறிய அறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

டப்ளிவ்.பீ.சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

பிரதிகள்
1. செயலாளர் - நிதி அமைச்சு
2. செயலாளர் - கம்பனி தோட்டங்களை மறுசீரமைத்தல், தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் சார்ந்த பயிர்ச்செய்கைகள், தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்துதல் மற்றும் தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு

தவிசாளர்
தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்

2020 ஆம் ஆண்டு 31 ஆந் திகதி முடிவடைந்த வருடத்திற்கான தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் நிதிக்கூற்றுகள் மற்றும் ஏனைய சட்ட, ஒழுங்கு முறைகளின் தேவைபாடுகள் தொடர்பாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12வது உறுப்புரைக்கமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 திகதிக்கு தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் நிதி நிலமைக்கூற்று மற்றும் அன்றைய தினத்தில் முடிவடைந்த வருடத்திற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மாற்றல் கூற்று, அன்றைய தினத்தில் முடிவடைந்த வருடத்திற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 திகதி முடிவுற்ற ஆண்டுக்கான பொழிப்பாக்கிய முக்கிய கணக்கீட்டு கொள்கைகள் அடங்கிய நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிஷக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) சட்டத்திற்கமைய சேர்த்து கூறவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) சட்டத்திற்கமைய எனது அறிக்கை எதிர்வரும் காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கு அடிப்படை பிரிவில் விளக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்கள் தவிர்த்து, சபையின் நிதிக் கூற்றுகளில் 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 திகதிக்கு நிதி நிலைமைக் கூற்று மற்றும் அன்றைய தினத்தில் முடிவடைந்த வருடத்திற்கான காசுப் பாய்ச்சல் கூற்று உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 02 இன் 09 ஆம் பந்திக்கமைய நிதி மற்றும் நிதிக்கு சமனானவையில் காட்டப்பட 03 மாத முதிர்வு காலத்தை கொண்ட ரூபா 20,000 பெறுமதியான நிலையான வைப்பு நிதி முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2015 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 20 ஆந் திகதி ரூபா 1,387,500 ஆக மதிப்பீடு செய்யப்பட்ட நிறுவனத்திற்குரிய நுவரெலியா மாவடத்தில் பொகவந்தலாவையில் அமைந்துள்ள 0.468 ஹெக்டெயார் காணி பரப்பில் அமைந்துள்ள பயிற்சி நிலைய காணியின் பெறுமதி நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டிருக்கவில்லை. மேலும் 2020 ஆம் ஆண்டு நவம்பர் 03 ஆந் திகதி சுகாதார அமைச்சினால் குறித்த பயிற்சி நிலையம் கொவிட் 19 சிகிச்சை நிலையமாக தற்காலிகமாக பொறுப்பேற்கப்பட்டிருந்தும் இது தொடர்பாக நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) கணக்காய்வு வருட இறுதியில் கட்டளை செய்யப்பட்ட செயற்பாடுகள் மற்றும் நூலக புத்தக கொள்வனவிற்காக 08 காசோலைகள் எழுதப்பட்டு அவற்றில் ரூபா 2,156,200 செய்து கொண்டிருக்கும் வேலை கணக்கிற்கும் ரூபா 828,669 நூலக புத்தக கணக்கிற்கும் வரவு வைக்கப்பட்டு பொருட்கள் மற்றும் சேவைகள் கிடைக்கும் வரை கைவசம் வைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக செயற்பாட்டு வேலை மற்றும் நூலக புத்தக கணக்குகளின் மீதி குறித்த பெறுமதியில் அதிகமாகவும், காசுப்புத்தகத்தின் மீதி ரூபா 2,984,869 குறைவாக நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) நிறுவனத்தினால் நடாத்திச் செல்லப்படும் அத்துருகிரிய பிரதேசத்தில் அமைந்துள்ள காணியில் 1.9499 ஹெக்டெயார் காணி துண்டு 2014 ஆம் ஆண்டு ஒக்டோபர் 15 ஆந் திகதிய 1884.̓.23 இலக்கமுடைய அதி விசேட வர்த்தமானியின் மூலம் இலங்கை இராணுவத்திற்கு கையகப்படுத்தல் மேற்கொண்டமைக்கு செலுத்த வேண்டிய ரூபா 152,585,000 இழப்பீட்டு தொகை 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் 11 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தும், இழப்பீட்டு தொகை தாமதமாகியமையால் கிடைக்க வேண்டிய ரூபா 42,594,530 தாமத வட்டி கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக அப்பெறுமதி கணக்காய்வு வருடத்தின் மேலதிகம் குறைவாக காட்டப்பட்டுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) அமைய நான் கணக்காய்வினை மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழ் எனது பொறுப்பு இவ்வறிக்கையின் நிதிக்கூற்று கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கு அடிப்படை வழங்குவதற்காக போதுமானதும் பொருத்தமானதும் கணக்காய்வு சாட்சிகள் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன என நான் நம்புகின்றேன்.

1.3 தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் 2020 ஆம் ஆண்டறிக்கையில் உள்ள ஏனைய தகவல்கள்

இக்கணக்காய்வு அறிக்கை திகதிக்கு பின் எனக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கும் தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் 2020 ஆம் ஆண்டு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டு இருப்பினும் நிதிக் கூற்றுகள் மற்றும் அவை தொடர்பாக எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள் ஏனைய தகவல்வல்கள் எனப் பொருள்படும். குறித்த ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பு கூற வேண்டும்.

நிதிக் கூற்றுகள் தொடர்பான எனது கருத்தில் ஏனைய தகவல்கள் மறைக்கப்படாத அதேவேளை நான் அது தொடர்பாக எவ்விதமான உறுதியையோ அல்லது நிலையையோ தெரிவிக்கவில்லை.

எனது கணக்காய்வோடு தொடர்புடைய நிதிக் கூற்றுகள் தொடர்பில் எனது பொறுப்பானது மேற்கூறிய அடையாளம் காணப்பட்ட ஏனைய தகவல்கள் கிடைக்கும் போது வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும் போது ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுடன் அல்லது கணக்காய்வில் அல்லது வேறு வகையில் பெற்றுக் கொண்ட எனது அறிவுக்கேட்ப போதுமானதாக பொருந்தாதவையா என கருத்தில் கொள்வதாகும்.

தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் 2020 ஆம் ஆண்டு அறிக்கையினை வாசிக்கும் போது அதில் அளவீடுகள் தவறாக காட்டப்பட்டுள்ளதாக நான் கருதும் சந்தர்ப்பத்தில் அவற்றினை நிவர்த்தி செய்யும் பொருட்டு கட்டுபாட்டு தரப்பினருக்கு அக்காரணங்களை வெளிப்படுத்தல் செய்ய வேண்டும். மேலும் நிவர்த்தி செய்யாமல் தவறாக காட்டப்பட்டிருந்தால் அதனை அரசியலமைப்பின் (154) 6 இன் சட்டத்திற்கமைய என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் உட்சேர்க்கப்படும்.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் சபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, நிருவாகம் தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் அவசியமானதாகும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான

உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிலையத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாக மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிலையத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிலையத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும்

நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது அடையாளம் காணப்பட்ட முக்கிய கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக கட்டுபாட்டு குறைபாடுகள் மற்றும் ஏனைய காரணங்கள் தொடர்பாக தொடர்புபட்ட தரப்பினர்களை தெரியப்படுத்துகின்றேன்.

2. ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குப்படுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(அ) உறுப்புரையில் உள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்க கணக்காய்விற்கு தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் வெளிப்படுத்தல்கள் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் எனது கணக்காய்வில் தெரியவரும் வகையில் முறையான நிதி அறிக்கைகள் சபையினால் நடாத்திச் செல்லப்பட்டுள்ளது.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) (ஜை) உறுப்புரையில் உள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்க சபையின் நிதிக்கூற்றுகள் கடந்த வருடத்துடன் தொடர்புபடுகின்றது.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) (ஸை) உறுப்புரையில் உள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்க கடந்த வருடம் என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 கடைபிடிக்கப்பட்ட செயற்பாடுகள், பெற்றுக்கொள்ளப்பட்ட சாட்சிகள் அடிப்படையிலும், போதுமானதான காரணங்களுக்கு வரையறைக்கு உட்படுத்தல் மூலம் பின்வரும் அறிக்கைகள் எதுவும் என் கவனத்திற்கு வரவில்லை

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஈ) உறுப்புரையில் உள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்க சபையின் கட்டுபாட்டு சபையின் ஏதேனும் ஒரு உறுப்பினருக்கு சபை தொடர்புபட்டு ஏதேனும் உடன்படிக்கை தொடர்பில் நேரடியாக அல்லது வேறு வகையில் சாதாரண வியாபார நிலைமைக்கு அப்பால் தொடர்புபட்டுள்ளதாக எனவும்

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஈ) உறுப்புரையில் உள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்க ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதா எனவும்

சட்டங்கள், விதிகள் ∴ஏற்பாடுகள் என்பவற்றுடனான தொடர்பு	அவதானிப்பு
2003 ஆம் ஆண்டு 06 ஆம் திகதிய பீஈடீ.∴12 இலக்கமுடைய அரச வியாபார சுற்றறிக்கையின் 6.5.1 மற்றும் 6.5.3 பந்திகள்	கணக்காண்டு நிறைவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுகளுடன் வருடாந்த அறிக்கை வரைபு

	தலைமை கணக்காய்வாளர் அதிபதிக்கு சமர்பிக்கப்பட வேண்டிருப்பினும் கணக்காய்வு வருடத்தின் நிதிக்கூற்றுகள் மற்றும் வருடாந்த அறிக்கை வரைபு சமர்பிக்கப்படவில்லை. மேலும் 2019 ஆண்டின் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்பிக்கபட்டு வெளியிடப்பட்டிருக்கவில்லை.

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் **12** (உ) உறுப்புரையில் உள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்க தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

(அ) 1979 ஆம் 45 இலக்க தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவன சட்டத்தின் 2 (ஈ) உறுப்புரையின் கீழ் நிறுவனத்தின் நோக்கமா கூறப்பட்டுள்ள " வேறு சமனான நிறுவனங்களினால் தற்போது ஏற்பாடுகள் செய்யப்படாத பெருந்தோட்ட முகாமைத்துவம் மற்றும் தொழிலாளர் உறவு துறைகளில் ஆராய்ச்சி மேற்கொள்ளல், 4 (ஈ) உறுப்புரைக்கமைய நிறுவன அதிகாரங்களின் கீழ் கூறப்பட்டுள்ள " பெருந்தோட்ட அபிவிருத்தியின் அனைத்து பிரிவுகள் தொடர்பாகவும் ஆராய்ச்சி மேற்கொள்ளல்" நிறுவன தொலைநோக்கின் கீழ் " பெருந்தோட்ட முகாமைத்துவம் தொடர்பாக ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் சிறந்த நிறுவனமாக அமைதல்" போன்ற காரணங்களை நிறைவேற்றும் வகையில் போதுமானவளவு அவதானம் செலுத்தப்படவில்லையென அவதானிக்கப்பட்டது.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் **12** (ஊ) உறுப்புரையில் உள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்க சபையின் வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

2.3 வேறு காரணங்கள்

(அ) 2020 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆந் திகதி தொடக்கம் தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் கூட்டப்பட்ட பெறுமதி அடிப்படையிலான வரிப்பதிவு போதாமையால் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் செயலற்றதாகப்பட்டிருந்த இருப்பினும் 2016 ஆம் ஆண்டு வரை காலத்திற்குரிய உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 19,820,121 குறை வரி நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டிருந்ததுடன் அதனை அறவிட முடியாத மீதியாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. இம்மீதியின் உண்மை தன்மை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இறப்பர், தேயிலை, தேங்காய் மற்றம் ஏனைய பயிர்கள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டில் 12,855 மாணவர்களின் பங்கேற்புடன் 232 தாவர அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தும், 2019 மற்றும் 2020 வருடங்களில் நடாத்தப்பட்ட வேலைத்திட்டங்களில் மாணவர்களின் பங்கேற்பு முறையே 5,414 மற்றும் 693 ஆவதுடன் நடாத்தப்பட்ட வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை 106 மற்றும் 12 மட்டுமே ஆகும்.

(இ) நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட பெருந்தோட்ட முகாமைத்துவம் தொடர்பான தேசிய டிப்ளோமா பாடநெறி, பெருந்தோட்ட முகாமைத்துவமும் புத்தகம் வைத்தல் பாடநெறியும் உள்ளிட்ட 06 பாடநெறிகளில் நிறைவுசெய்யப்பட்டிருந்த 02 பாடநெறிகளுக்கு பதிவுச் செய்திருந்த மாணவர்களின் எண்ணிக்கை 259 ஆவதுடன் அதில் 103 பேர் அவ்வாறாயின் நூற்றில் 40 சதவீதமானோர் விலகிசென்றிருந்தனர். இருப்பினும் அதற்கான காரணங்களை

ஆராய்ந்து பாடநெறியின் தரத்தினை அதிகரித்து திறனை அதிகரிப்பதற்கு அவதானம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிறுவனத்தினால் கணக்காய்வு வருடத்தில் 157 மாணவர்களின் பங்கேற்புடன் கல்வி மற்றும் தொழில்சார் 08 பயிற்சி வேலைத்திட்டங்களை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் 47 மாணவர்களின் பங்கேற்புடன் 02 வேலைத்திட்டங்கள் மட்டும் நடாத்தப்பட்டிருந்ததுடன் கடந்த 04 வருடங்களுடன் ஒப்பிடும் போது 760 மாணவர்களின் பங்கேற்புடன் 50 வேலைத்திட்டங்களை நடாத்த திட்டமிடப்பட்டு 609 மாணவர்களின் பங்கேற்புடன் 38 வேலைத்திட்டங்கள் மட்டும் நடாத்தப்பட்டிருந்தது. மேலும் 2019 மற்றும் 2020 வருடங்களில் 74 பேரின் பங்கேற்புடன் 05 திறன் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நடாத்த திட்டமிடப்பட்டிருந்தும் 38 மாணவர்களின் பங்கேற்புடன் 03 வேலைத்திட்டங்கள் மட்டும் நடாத்தப்பட்டிருந்தது. காலத்திற்கேற்றவாறு இப்பாடநெறிகளில் விடய பரப்புகளில் பரிந்துரை திருத்தங்களை மேற்கொண்டு தேவையான வசதிகளை அபிவிருத்தி செய்யாமை இந்நிலமைக்கு காரணமாக அமைந்துள்ளமை அவதானிக்கப்பட்டது.

(உ) 2019 ஆம் வருடத்தில் ரூபா 135,782,603 ஆன அரச மூலதனம் மற்றும் கட்டண மானியம் 2020 ஆம வருடத்தில் ரூபா 164,378,397 வரை ரூபா 28,595,794 இனால் நூற்றுக்கு 21 ஆக அதிகரித்திருந்தது. இருப்பினும் கடந்த வருடத்தில் ரூபா 108,847,282 ஆன நிறுவத்தின் சுய உழைப்பு வருமானம் ரூபா 45,963,210 வரை நூற்றுக்கு 57.8 வீதத்தினால் குறைந்துள்ளது. நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட கமத்தொழில் தொடர்பான பாடநெறிகள் கொவிட்-19 தொற்று காரணமாக பொருத்தமான முறைக்கேற்ப நடாத்திச் செல்வது தொடர்பில் அவதானம் செலுத்தப்படாமை இதற்கான காரணமாக அமைந்துள்ளதாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஊ) நிறுவனத்தின் அனுமதிக்பட்ட ஊழியகுழாமாக காணப்பட்ட 71 பேரில் சிறப்புவாய்ந்த பயிற்சிவிப்பாளர்(பெருந்தோட்ட முகாமைத்துவம்), உதவி பணிப்பாளர் (சந்தைப்படுத்தல், வியாபார அபிவிருத்தி மற்றும் திட்டமிடல்), பயிற்சி உத்தியோகத்தர்(பெருந்தோட்ட பொறியியல்) பதவிகள் உள்ளிட்ட 16 பதவிகளுக்கு வெற்றிடம் காணப்பட்டமை நிறுவனத்தை ஸ்தாபிக்கும் போது எதிர்பார்க்ப்பட்ட நோக்கத்தை அடைய தாக்கத்தை செலுத்தியாக அவதானிக்கப்பட்டது. மேலும் 2019 மற்றும் 2020 வருடங்களில் 06 பதவிகளின் கீழ் 08 பதவிகள் அனுமதிக்கப்பட்டிருந்தும் அதற்கான ஆட்சேர்ப்பு முறைகள் அங்கீகரிக்காமல் ஆட்சேர்ப்பு செய்யமுடியவில்லை.

டப்ளிவ்.பி.சி விக்ரமரத்ன
தலைமை கணக்காய்வாளர் அதிபதி